# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 2 சனிக்கிழமை (18-08-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:265


## அரசை உடன் பதவி விலகக் கோரிக்கை
# எதிர்க்கட்சிக் கூட்டத்தில்
# பெரும்பான்மை எம்.பிக்கள்!

## 113 பேர் கூடித் தீர்மானம் மற்றிருவர் ஆதரவு தெரிவிப்பு

கொழும்பு,ஓகஸ்ட் 18

**எதிர்க்கட்சிகள் நேற்றுக் கூட்டிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில், நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்கள் பங்கு பற்றினர். அக்கூட்டத்தில் நாடாளுமன்றப் பெரும்பான்மை எதிர்க்கட்சிகளிடம் இருப்பதை நிரூபிக்கும் பிரகடனம் உட்படப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**

**அரசு பெரும்பான்மையை இழந்திருப்பது நிரூபிக்கப்பட்டுவிட்டதால் அது உடன் பதவி விலக வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் கோரினர்.**

எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே. கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஐ.தே.க., ஜே.வி.பி., தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், சிஹல உறுமய, ரெலோ, அகில இலங்கைத் தமிழ்க் காங்கி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் புலிகள் நால்வர் களப்பலி

வவுனியா,ஓக.18

கடந்த 13ஆம், 16ஆம் திகதிகளில் முகமாலைப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் தமது தரப்பில் 4பேர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

களப்பலியான அந்த நால்வரின் விவரம் வருமாறு:-

★கப்டன் தேவதாஸ் (ரவிச்சந்திரன் பாபு - யாழ்ப்பாணம்)

★பாவரசி (வேலாயுதம் சசிகலா - மட்டக்களப்பு)

★அம்பிகை (போஜராசா சிவரஞ்சினி - மட்டக்களப்பு)

★மேஜர் இளநிலவன் (ரங்கசாமி மதுசங்கர் - திருகோணமலை) (க-7)

## மட்டு.தொப்பிகல பகுதியில் நேற்று 'கிபிர்' குண்டுவீச்சு!

மட்டக்களப்பு,ஓக.18

மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியான தொப்பிகல பிரதேசம் மீது நேற்று நண்பகல் 'கிபிர்' விமானங்கள் பரவலான குண்டுத்தாக்குதலை நடத்தின என மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன.

இரண்டு 'கிபிர்' விமானங்கள் நான்கு தடவைகள் மாறிமாறி குண்டுத்தாக்குதலை நடத்தின என்றும் -

இந்தத் தாக்குதலை அடுத்து தொப்பிகல கிராமத்துக்கு அயலில் உள்ள பெண்டுகள்சேனை, குடும்பிமலை, தரவை, மியாந்தள்குளம், ஆகிய கிராம மக்களிடையே பெரும பதற்றநிலை காணப்பட்டதாகவும் - அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

இந்தக் குண்டுவீச்சுக்களால் வீடுகள் பல சேதமடைந்ததாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்துள்ள போதிலும், மேலதிகத் தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

மட்டக்களப்புப் பகுதியில் கடந்த 15 தினங்களில் நான்காவது தடவையாக இடம்பெற்ற விமானத்தாக்குதல் இது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(க-7-4)

## இரசாயன ஆயுதக் கொள்வனவை அடியோடு மறுக்கின்றது அரசு!

கொழும்பு,ஓக.18

இலங்கை இராணுவம் இரசாயன ஆயுதங்களைக் கொள்வனவு செய்ததாக வெளியான தகவல்களையும் -

அது தொடர்பாக விடுதலைப் புலிகள் வெளியிட்ட குற்றச்சாட்டுக்களையும் -

இலங்கை அரசு திட்டவட்டமாக மறுத்துள்ளது.

ரஷ்யாவிலிருந்து இலங்கை அரசு வாங்கியதாகக் கூறப்படும் ஆயிரம் றொக்கட்டுகளே இரசாயன ஆயுதங்கள் கொள்வனவு பற்றிய சர்ச்சையைக் கிளப்பியுள்ளன.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளினால் தடைசெய்யப்பட்ட இந்த ஆயுதங்களை இலங்கை அரசு கொள்வனவு செய்ததில் பெரும் ஊழல் இடம்பெற்றிருப்பதாக கொழும்பு ஆங்கிலவார இதழ் ஒன்று பரபரப்பான செய்தியை வெளியிட்டிருந்தது.

இதுகுறித்து பி.பி.ஸியின் கொழும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரசாயன ஆயுத விவகாரம்: தமிழ்க் கட்சிகள் இன்று ஆராய்வு

கொழும்பு,ஓக.18

வடக்கு - கிழக்கு யுத்தமுனையில் பாவிப்பதற்காக அரசு இரசாயன ஆயுதங்களைக் கொள்வனவு செய்துள்ளமை தொடர்பாக ஆராய்வதற்காக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று கூடவிருக்கின்றனர்.

கொழும்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் இன்று காலை 10 மணிக்கு இந்தக் கூட்டம் இடம்பெறும்.

அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிராக எடுக்க வேண்டிய செயற்பாடுகள் குறித்து தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் விரிவாக ஆராயவுள்ளனர். (க-3-4)

## மண்டூரில் மோதல்

மட்டக்களப்பு,ஓக.18

மட்டக்களப்பு மண்டூர் பகுதியில் நேற்று முனதினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் விசேட அதிரடிப்படைச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

இதேவேளை - மேற்படி சம்பவத்தில் உயிரிழந்ததாகத் தெரிவித்து படையினர் இரண்டு இளைஞர்களின் சடலங்களை களுவாஞ்சிக்குடி ஆஸ்பத்திரியில் ஒப்படைத்துள்ளனர் என்றும் -

அந்தச் சடலங்களில் ஒன்றில் விடுதலைப் புலிகள் அணியும் இலக்கத் தகடு காணப்பட்டதாகவும் - மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன.

(க-7-4)

## இரசாயன ஆயுதங்களைப் பாவித்து புலிகளை முற்றாக ஒழிக்கவேண்டும்
### சிஹல உறுமய தலைவரின் விருப்பம்

கொழும்பு,ஓக.18

அரசு கொள்வனவு செய்ததாகக் கூறப்படும் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளை முற்றாக ஒழிக்கவேண்டும் என்று சிஹல உறுமயவின் தலைவர் திலக் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களுடனான நேற்றைய சந்திப்பிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இரசாயன ஆயுதங்களை அரசு கொள்வனவு செய்துள்ளதோ, இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் இரசாயன ஆயுதங்களை அரசு கொள்வனவு செய்திருந்தால், அதைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்கவேண்டும். புலிகளை அழிக்க அதுதான் ஒரேவழி.

புலிகளுக்கு எதிராக அந்த ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் தவறு ஏதும் இல்லை. இதை எவரும் கண்டிக்கவும் கூடாது; எதிர்க்கவும் கூடாது - இப்படி அவர் கூறினார். (க-3)

## வவுனியாவில் புலிகள் தாக்குதல்: சிப்பாய் பலி; மற்றொருவர் காயம்

வவுனியா,ஓக.18

வவுனியா - இரணைஇலுப்பங்குளம் பகுதியில் நேற்றுக் காலை 7 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்; மற்றொரு சிப்பாய் படுகாயமடைந்தார்.

வீதி துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீதே விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த சிப்பாய் மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா ஆஸ்பத்திரியில் இருந்து அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (க-7-164)

## புலிகள் மோட்டார் தாக்குதல்: முகமாலை, நுணாவில் பகுதிகளில் நான்கு படையினர் காயமுற்றனர்

கொழும்பு,ஓக.18

குடாநாட்டில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இருவேறு சம்பவங்களில் படையினரில் நால்வர் காயமடைந்தனர் என விசேட ஊடகத்தகவல் நிலையம் தெரிவித்தது.

முகமாலை, நுணாவில் ஆகிய பகுதிகளில் உள்ள முன்னரங்க நிலைகள் மீது நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட மோட்டார் தாக்குதலில் இரு படையினரும் -

அதேதினம் காலை 5 மணிக்கு எழுதுமட்டுவாழுக்கு தெற்கே பொன்னார் பகுதியில் உள்ள முன்னரங்க நிலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட மோட்டார் தாக்குதலில் இரு படையினரும் - காயமடைந்தனர்.

நாகர்கோயில் பகுதியில் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் விடுதலைப் புலிகளின் நான்கு உறுப்பினர்கள் உயிரிழந்தனர் என்றும் விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

(க-3)

## ஜே.வி.பி. ஆதரவுடன் 'தகுதி காண்' அரசு அமைக்கும் முயற்சிக்கு முற்றுப்புள்ளி?

கொழும்பு,ஓக.18

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்துள்ள பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஜே.வி.பியின் நிபந்தனைகளுக்கு இணங்கி, 'தகுதி காண்' அரசாக அடுத்த ஒருவருட காலத்துக்கு ஆட்சி அதிகாரத்தில் நீடிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்ட யோசனைக்கும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்று எதிர்க்கட்சிகள் கூட்டிய கூட்டத்தில் ஜே.வி.பி. தரப்பு முழுமூச்சாகப் பங்குகொண்டு, அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் தீவிரப் போக்கைக் காட்டியமை, ஜே.வி.பி. - பொ.ஐ.மு. சமரசப் பேச்சு - இணக்க முயற்சி - முறிந்துவிட்டதன் வெளிப்பாடே என்று அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜே.வி.பி. நிபந்தனைகளுக்கமைய, 'தகுதிகாண்' அரசு ஒன்றை அமைத்து, சுதந்திரமாகச் செயற்பட முடியாத நிலையில் "நித்திய கண்டம்; பூரண ஆயுசு" என்ற போக்கில் ஆட்சி அதிகாரத்தில் நீடிப்பதைவிட, பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவுடன் இணைந்து தேசிய அரசு அமைப்பது அல்லது புதிய பொதுத் தேர்தலை எதிர்கொள்வது சிறந்தது என பொ.ஐ.முன்னணியின் மூத்த தலைவர்கள் கருதுவதாகவும் -

அதனாலேயே ஜே.வி.பியுடனான சமரச முயற்சிகள் கைவிடப்பட்டன என்றும் - அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் 27 பிரதி அமைச்சர்கள் தமது திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதங்களை நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளித்தபோது எடுக்கப்பட்ட படங்கள்.

# விமானக் குண்டுவீச்சை நிறுத்தி நீதியான அரசியல் தீர்வைக் காண்க!

## முல்லை மாணவர் ஒன்றியம் அரசிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.18

தமிழ் மக்கள் மீதான கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்களை நிறுத்தி பெறுமதிமிக்க உயிர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளைக் கைவிட்டு, இனப்பிரச்சினைக்கு நீதியான அரசியல் தீர்வினைத் துரிதப்படுத்த வேண்டும் என்று யாழ்.பல்கலைக்கழக முல்லைத்தீவு மாவட்ட மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது.

விஸ்வமடுவில் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற குண்டு வீச்சுத் தாக்குதலைக் கண்டித்து விடுத்துள்ள ஓர் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 13.08.2001 திங்கள் முல்லைத்தீவு, விஸ்வமடுப் பகுதியில் விமானப் படையின் மிலேச்சத்தனமான - மனிதாபிமானமற்ற குண்டு வச்சுச் சம்பவத்தில் மீண்டும் ஓர் அப்பாவித் தமிழ் மாணவனின் உயிர் சாவு கொள்ளப்பட்டிருக்கின்றது.

எமது சமுதாயத்தின் அத்திவாரமாக இருப்பவர்கள் மாணவச் செல்வங்களே. ஒரு நாட்டினுடைய மனித வளங்களை சிறப்பாகப் பேணிப்பாது காக்க வேண்டிய கடப்பாடு அந்த நாட்டு அரசாங்கத்துக்குரியது. இலங்கையைப் பொறுத்தவரையில் போர்ச் சூழலைக் காரணம்காட்டி அரசாங்கமே தமிழ் மக்கள் மீது இன ரீதியான பாரபட்சத்துடன் தமிழ் மக்களினுடைய ஒட்டுமொத்தமான வளங்களை அழித்துவருகின்றது. ஒவ்வொரு முறையும் நடைபெறும் கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சில் சிறுவர்களும், மாணவர்களும் கொல்லப்படுவது தமிழ்ப் பகுதிகளில் பல்லாண்டுகளாக நடைபெற்றுவரும் சர்வசாதாரண நிகழ்வாகிவிட்டது.

நடைமுறையிலுள்ள சட்டங்களும், சூழலும் இவ்வாறான விமானத் தாக்குதல்களை மேற்கொள்ளும் விமானப் படையினரைப் பாதுகாப்பனவாக இருக்கின்றனவே அன்றிப் பாதிக்கப்படும் மக்களுக்கு எந்த விதமான பரிகாரத்தையும் பெற்றுக் கொடுக்கக் கூடியனவாக இல்லை.

ஒரு இனத்தின் எதிர்கால மனித வளம் எந்தவிதமான காரணமுமின்றி கண்மூடித்தனமாக அழிக்கப்படுகின்றது என்றால் அது ஒரு அப்பட்டமான இனப்படுகொலையே ஆகும்.

ஒரு நாட்டில் அகால மரணமடையும் ஒவ்வொரு பிரஜைக்கும் முறைப்படி தகுதிவாய்ந்த நீதிபதி ஒருவரின் முன்னிலையில் கட்டாயமாக மரண விசாரணை மேற்கொள்ளப்பட்ட பின்னரே ஏனைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். ஆனால் தமிழ்ப் பகுதிகளில் 1985 தொடக்கம் இன்றுவரை சுமார் 15 வருடங்களுக்கும் மேலாக விமானக் குண்டுவீச்சினால் கொல்லப்பட்ட பொதுமக்களுக்கு இந்த சர்வதேச நியதிகளும், சட்ட மரபுகளும் ஒருபோதும் பேணப்படவில்லை. ஆகவே இலங்கையின் எந்தவொரு விமானிக்கும் எந்தவொரு தமிழன் மீதும் குண்டுவீசித் தாக்கி அழிப்பதற்கான பூரண அதிகாரமும், உரிமமும் பகிரங்கமாகவே வழங்கப்பட்டுள்ளது என்பதையே இச்சம்பவமும் தெட்டத்தெளிவாகக் காட்டுகின்றது.

### கல்வியில் பாரபட்சம்

இலங்கையில் சிங்கள தேசத்தில் கல்விகற்கின்ற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அரசினால் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற ஆதார வசதிகள் எதுவும் வடக்கு - கிழக்கிலோ அல்லது, மலையக தமிழ் மாணவர்களுக்கோ கிடைப்பதென்பது அரிதாகவே உள்ளது. குறிப்பாக வன்னிப் பிரதேசம் மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகளால் பாதிக்கப்பட்டுள்ள நிலையிலும் 'ஏழைகளின் மூலதனம் கல்வியே' என்ற வகையில் அம்மாணவர்கள் தென்பகுதி மாணவர்களுடன் போட்டி போடும் அளவிற்கு கல்வியில் முனைப்போடு செயற்பட்டுவருகின்றனர். இந்நிலையில் அரச பயங்கரவாதம் தமிழ் மாணவர்களை மிக மோசமாக இன அழிப்பிற்கு உள்ளாக்கி வருகின்றது.

சர்வதேச சிறுவர் பாதுகாப்பு நிறுவனங்கள் மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் இவையெல்லாம் வன்னிப் பகுதி தமிழ் மாணவர்கள் தொடர்பாக பாராமுகமாகவும், மாற்றாந்தாய மனப்பான்மையுடனுமே செயற்பட்டு வருகின்றன.

இத்தகைய தொண்டு நிறுவனங்கள் மனித உரிமை மீறல்களைக் கண்டிக்காமல் இருப்பது வேதனைக்குரியது. இது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும் இந்நிலைமை இன அழிப்பில் ஈடுபட்டுள்ள பேரினவாதிகளுக்கு அனுகூலமான சூழ்நிலையையே தோற்றுவித்துள்ளது.

அரசாங்கத்தின் இத்தகைய அப்பாவித் தமிழ் மக்கள் மீதான அடாவடித்தனமான இன அழிப்பு நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அரசு இத்தகைய கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சுக்களை நிறுத்தி பெறுமதிமிக்க உயிர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளைக் கைவிட்டு, இனப்பிரச்சினைக்கு நீதியான அரசியல் தீர்வினைத் துரிதப்படுத்த வேண்டும் எனவும் வினையமுடன் கேட்டுக்கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

# நல்லூரில் நேற்று இரதோற்சவம் மிக பக்திபூர்வமாக நடைபெற்றது

வரலாற்றுப் பெருமைமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்றுக் காலை மிகவும் பக்திபூர்வமாக இடம் பெற்றது.

காலை 6.30 மணிக்கு வசந்த மண்டப் பூசை நடைபெற்று முருகப் பெருமான் 7.30 மணிக்குத் தேருக்கு எழுந்தருளினார்.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்துவந்த பல்லாயிரக் கணக்கான பக்தர்களால் ஆலயப் பகுதி சனத்திரளாகக் காணப்பட்டது.

பக்தர்கள் அதிகாலை தொடக்கம் ஆலயப் பகுதியில் காவடி எடுத்தும், அடி அழித்தும், அங்கப் பிரதட்ஷணம் செய்தும், கற்பூரச்சட்டி ஏந்தியும் தங்களது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றியதைக் காணமுடிந்தது.

தொண்டர் அமைப்புப் பிரதிநிதிகள் ஆலயச் சுற்றாடலில் வீதி ஒழுங்குகளைப் பேணுவதிலும் மற்றும் பக்தர்களுக்கு முதலுதவி அளிப்பதிலும் ஈடுபட்டனர்.

நயினாதீவு மற்றும் ஏழாலை ஆகிய இடங்களிலிருந்து பாதயாத்திரைகளும் இடம்பெற்றன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேர் உற்சவம் தொடர்பான நிகழ்வுகளை நேரடி ஒலிபரப்புச் செய்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். (ஐ-6-10-15)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.18

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவத்தை ஒட்டி ஆலயச் சூழலில் தினமும் நடைபெற்றுவரும் நிகழ்வுகளில் தீர்த்தத்திருவிழாவான இன்று நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் மாலை 6 மணிக்கு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வைதித்தியானந்த சர்மாவின் கந்தபுராணச் சொற்பொழிவில் 'விபீஷணன் சரணாகதி'.

★ ★ ★

இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் மாலை 6 மணிக்கு துர்க்காமணி மண்டபத்தில் இடம்பெறும் தெய்வீக இசையரங்கில் என்.வி.எம்.நவரத்தினத்தின் பாட்டு.

★ ★ ★

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் ஏற்பாட்டில் மாலை 6 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் சொற்செல்வர் ஆறு.திருமுருகனின் பெரியபுராணச் சொற்பொழிவு இடம்பெறும். நிறைவுரையை யாழ்.இந்து முன்னாள் பிரதி அதிபர் க.சிவராமலிங்கம் நிகழ்த்துவார்.

★ ★ ★

வடபிராந்திய இந்துப் பேரவையின் ஏற்பாட்டில் பிற்பகல் 2 மணி முதல் இடம்பெறும் திருமுறைப் பாராயணம், சொற்பொழிவுத் தொடரில் -

அறுபத்தி மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் ஆசிரியமணி எம்.எஸ்.ஸ்ரீதயாளனின் 'அடியார் கண்ட அன்புநெறி' என்ற தலைப்பிலான கதாப்பிரசங்கம்.

★ ★ ★

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் அதிகாலை 5 மணி முதல் திருமுறை வீதிப்பஜனை, குருமூர்த்த ஆலயத்தில் காலை 7 மணிக்கு விசேட பூஜை, காலை 9.30 மணி முதல் 12.30 மணிவரையும், பி.ப. 3.00 மணிமுதல் 4.30 மணிவரையும் 'கந்த புராணம்' புராணபடனம் ஆகியன இடம்பெறும். (ஐ-9)

# தகுதிகாண் ஆசிரியர் பதவிகள்; 12 பேரின் நியமனங்கள் ரத்து!

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ்மொழி மூல அரசாங்கப் பாடசாலைகளில் கடந்த 1999ஆம் ஆண்டில் தகுதிகாண் ஆசிரியர் நியமனம் பெற்றவர்களில் 12 பேரின் நியமனங்கள் உடனடியாக ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் உள்வாரியாகக் கற்று வருகின்றமை மற்றும் ஒழுங்காகக் கடமைக்குச் சமுகமளிக்காமை ஆகிய காரணங்களினால் இவர்களின் நியமனங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## புதிய சப்பரம்

சுன்னாகம்,ஓக.18

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலயத்துக்குப் புதிதாகச் சப்பரம் ஒன்று உருவாக்கப்படுகிறது. ஆலய அலங்கார உற்சவத்தில் முதன் முதலாக இச்சப்பரம் பயன்படுத்தப்படவுள்ளது. (க-27)

# விடைத்தாள் மதிப்பீட்டாளருக்கு திங்களன்று விமானப் பதிவு

யாழ்ப்பாணம்,ஓக.18

தற்பொழுது நடைபெற்றுவருகின்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பிடும் பணியில் ஈடுபடவுள்ள 30 அலுவலர்கள் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை விமான மூலம் கொழும்பு செல்லவுள்ளனர்.

இந்த 30 பேரையும் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பயணத்துக்குரிய பணத்துடன் வேம்படி மகளிர் கல்லூரிக்கு வருகை தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு செல்லவுள்ள 30 பேரின் பெயர்கள் வருமாறு:-

எஸ்ரி. இராஜேஸ்வரன், பொ.மகிவன், சி.ஸ்ரீசற்குணராசா, கே.அருள்வேல், பி.கோபாலகிருஷ்ணன், திருமதி கே. இராமநாதன், என்.ஞானகுமரன், கே. கந்தசாமி, எஸ்.சிவகுமாரன், திருமதி சி.இராசரத்தினம், வி.யுகபாலசிங்கம், கே.நவரத்தினம், கே.தங்கராசா, எஸ். சோதிலிங்கம், திருமதி ஆர்.யோகநாதன், திருமதி எஸ்.தேவதாசன், திருமதி கே.பவசிங்கம், செல்வி சி. பொன்னையா, எஸ். இராஜபுலேந்திரன், ஐ.சண்முகலிங்கம் -

திருமதி வி.புஸ்பநாதன், திருமதி பு.சண்முகலிங்கம், திருமதி கு.ஈஸ்வரி, செல்வி எஸ்.சுதாமதி, திருமதி ஜெ.செந்தில்வேல், எஸ். நகுலராசா, ஏ.கைலைவாசன், செல்வி ரி.தேவகாந்தி, திருமதி வி.சுந்தரலிங்கம், எ.கலைச்செல்வன். (ஐ-10)


## அந்தியேட்டி அழைப்பு

### திருமதி ஆறுமுகம் திருநாயகம்

அரியாலை, ஈச்சங்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ஆறுமுகம் திருநாயகம் அவர்கள் 19-07-2001 அன்று இறையடி சேர்ந்தமையால் எமக்கு ஏற்பட்ட துயரத்தில் பங்குகொண்டு, எமக்குப் பல வழிகளிலும் உதவியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறி, தேறுதல் வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (18-08-2001) சனிக்கிழமை அன்னாரது நினைவாக எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*179, பலாலி வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.* (C/17918)

தகவல்:
**க.சண்முகநாதன்**
(ஊழியர், யாழ்.பல்கலைக்கழகம்)

## மரண அறிவித்தல்

### திருநாவுக்கரசு குகன்

உரும்பிராய் தெற்கை சேர்ந்த திருநாவுக்கரசு குகன் நேற்று (17.08.2001) வெள்ளிக்கிழமை இந்தியாவில் காலமானார்.

இவர் இளைப்பாறிய ஆசிரியர் திருநாவுக்கரசு - மகேஸ்வரி (கனடா) தம்பதிகளின் ஏக புத்திரனும், இளைப்பாறிய R.M.P.தாமோதரம்பிள்ளை - குணமணி (லண்டன்) தம்பதிகளின் மருமகனும், தமயந்தியின் (லண்டன்) அன்புக் கணவரும், கீர்த்தனா, வாசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சூரியகலா (கனடா), சித்திரகலா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற மகேந்திரம், சந்திரகுமார் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் உரும்பிராயைச் சேர்ந்த நற்குணம், நித்தியானந்தம், காலஞ்சென்ற சத்தியநாதன் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.* (C/17917)

தகவல்:
**மா.நற்குணம்,**
**மா.நித்தியானந்தம்** (மாமன்)

## தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான

# 'டைனமைற்' தொழிற்சாலை வெடிவிபத்தில் 25 பேர் பலி!

சென்னை,ஓக.18

தமிழ்நாடு வேலூர் மாவட்ட காட்பாடியில் உள்ள தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான வெடிமருந்துத் தொழிற்சாலை ஒன்றில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட வெடிவிபத்தில் 25 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்; மேலும் 5 பேர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்தவர்களில் மூவ ரின் நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக உள்ளது.

'டைனமைற்' தயாரிக்கும் தொழிற்சாலையிலேயே இந்த விபத்து ஏற்பட்டது. காலை 9.30 மணியளவில் வெடிமருந்துடன் வெடிக்கவைக்கும் கருவியை (டெட்னேட்டர்) இணைக்கும் இறுதிக் கட்டப் பணி நடந்துகொண்டிருந்த பிரிவில் ஏற்பட்ட விபத்தே இந்த வெடிவிபத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பிரிவில் முதல் வெடிவபத்து ஏற்பட்டதும் தொழிற்சாலைக் கட்டடத்தில் சேமிக்கப்பட்டிருந்த 'டைனமைற்'றுக்கள் மற்றும் வெடிமருந்துகள் தொடர்ச்சியாக வெடித்தன. இதனால் ஏற்பட்ட வெடிச் சத்தம் பல மைல் தொலைவு தூரம் கேட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. விபத்தால் தொழிற்சாலைக் கட்டடம் தரைமட்டமானது.

வபத்து இடம்பெற்றபோது 30இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அங்கு பணிபுரிந்துகொண்டிருந்தனர்.

அவர்களில் 25பேர் உயிரிழந்தனர்; இரு பெண்கள் உட்பட மூவர் தீயணைப்புப் படையினரால் கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து மோசமான எரிகாயங்களுடன் மீட்கப்பட்டனர். மீட்புப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. இதுவரை இடிபாடுகளுக்குள் இருந்து 15 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றில் 6 சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு 50 ஆயிரம் ரூபாவும் படுகாயமடைந்தவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாவும் நிவாரணமாக வழங்கப்படும் என்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அறிவித்துள்ளார். (ம-ஓ-10)

# சீன இளைஞர்கள், யுவதிகள் பலர் புகைத்தலால் மரணமாகும் ஆபத்து

## விஞ்ஞானிகள் எச்சரிக்கை

பெய்ஜிங்,ஓக.18

புகைப்பிடிக்கும் பழக்கத்தால் சீனாவில் மூன்றிலொரு பகுதி இளைஞர், யுவதிகள் மரணமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

ஹொங்ஹொங்கில் கடந்த பல வருடங்களாக மேற்கொண்டுவந்த ஆய்வின் அடிப்படையிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆய்வுக்காகக் கடந்த பல வருடங்களாக ஹொங்ஹொங்கில் உயிரிழந்த இளைஞர், யுவதிகளின் சடலங்களை விஞ்ஞானிகள் தீவிர மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

இந்தப் பரிசோதனைகளில் இருந்து உயிரிழந்த இளைஞர், யுவதிகளில் மூன்றிலொரு பகுதியினரின் மரணத்துக்கும் புகைத்தலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

உலகிலேயே புகைப்பழக்கத்துக்கு அடிமையானவர்கள் அதிகமுள்ள நாடு சீனா. உலகில் அதிக அளவு சிகரெட் உற்பத்தி செய்யும் நாடும் சீனா என்பது குறிப்பிடத்தக்கது. (ம-10)

### பஸ் விபத்தில் 23 பேர் பலி!

நைரோபி,ஓக.18

கென்யாவில் பஸ் ஒன்று நேற்று முன்தினம் இரவு விபத்துக்குள்ளானதில் 23 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

நைரோபிக்கு 50 கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஓர் இடத்தில் இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றது.

பஸ் பாதையில் இருந்து ஆற்றுக்குள் பாய்ந்ததில் அதில் இருந்தவர்களில் 23பேர் நீரில் மூழ்கி மரணமானதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

# மேற்கு நாட்டு இராஜதந்திரிகளை வெளியேறுமாறு தலிபான் பணிப்பு

காபூல்,ஓக.18

ஆப்கானிஸ்தானில் உள்ள மேற்கு நாட்டு இராஜதந்திரிகள் அனைவரையும் உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறுமாறு தலிபான்கள் உத்தரவிட்டுள்ளனர்.

மதப் பிரசாரத்தில் ஈடுபட்டமைக்காக 8 வெளிநாட்டவர்களுக்குத் தலிபான் தலைவர் முல்லா முஹமட் ஒமர் சிறைத் தண்டனை விதித்திருந்தார். அவர்களை விடுதலை செய்யுமாறு மேற்கு நாடுகள் தலிபான்களுக்கு அழுத்தம் கொடுத்து வந்தன.

இதனால் சீற்றமடைந்த தலிபான்கள் சிறையில் உள்ள வெளிநாட்டவர்களை விடுவிக்க முடியாது எனத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளதுடன், மேற்குநாட்டு இராஜதந்திரிகள் அனைவரும் உடன் வெளியேற வேண்டும் என்றும் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

இதனை அடுத்து -

இந்தவிடயத்தில் தலிபான்களுடன இணக்கமான போக்கை ஏற்படுத்துவது குறித்துப் பாகிஸ்தானில் உள்ள மேற்குநாட்டுத் தூதுவர்கள் கூடி ஆராய்ந்துள்ளனர்.

இந்த விடயத்தில் ஆப்கானிஸ்தானுக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையில் தான் மத்தியஸ்தம் ஏதும் செய்யப்போவதில்லை என்று பாகிஸ்தான் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.



ஆப்கானிஸ்தானில் சிறை வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டவர்கள் எட்டுப் பேரையும் சந்திப்பதற்கு அமெரிக்க இராஜதந்திரி டேவிட் டொனா மற்றும் ஆஸ்திரேலிய இராஜதந்திரி அலிஸ்டர் அடம்ஸ் ஆகியோர் காபூலிலுள்ள தலிபானின் வெளியுறவு அமைச்சு அலுவலகத்துக்குச் சென்றபோது எடுக்கப்பட்ட படம் இது. எனினும் கைதிகளைப் பார்வையிட அவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

### மனநோயாளர்கள் அரச ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம்

சென்னை,ஓக.18

தமிழ்நாட்டில் ஏர்வாடி தர்க்காவைச் சுற்றி இருந்த மனநோயாளர் விடுதிகள அனைத்தையும் மூடிவிடுமாறு தமிழக அரசு உத்தரவிட்டதை அடுத்து அங்கு சிகிச்சைக்காகத் தங்கவைக்கப்பட்டிருந்த 150 மனநோயாளர்களும் கீழ்ப்பாக்கத்தில் உள்ள அரச மனநோயாளர் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

அண்மையில் இந்த தர்க்காவின் அருகில் இருந்த மனநோயாளர் விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக 28 மனநோயாளர்கள் உடல் கருகிப் பலியாகியமை தெரிந்ததே. இந்தச் சம்பவத்தையடுத்தே தர்க்காவைச் சுற்றி உள்ள தனியார் மனநோயாளர் விடுதிகள் அனைத்தையும் மூடிவிடுவதற்கு தமிழக அரசு முடிவு செய்தது.

(ம-10)

# தமது தளபதிகள் 25 பேரை தலிபான்கள் கைது செய்தனர்

## எதிரணிக்கு உதவினார்களாம்

காபூல்,ஓக.18

எதிரணிப் படைகளுக்கு உதவினார்கள் என்ற தேசத் துரோகக் குற்றச்சாட்டின் பேரில் தலிபான் படைத் தளபதிகள் 25பேர் அந்த அமைப்பின் தலைவர் அப்துல்லா ஒமரின் உத்தரவின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பல்க மற்றும் சமங்கன் மாகாணங்களின் தலைநகரான மஷார்-ஈ-ஷெரிப் நகரில் வைத்து இந்த 25 தலைவர்களும் கைது செய்யப்பட்டதாக ஆப்கானிஸ்தான் வானொலி தெரிவித்தது.

எதிரணிக்கு உதவும் நோக்குடன் கூட்டுச் சதியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

"கூட்டுச் சதியில் ஈடுபட்டமைக்கு ஆதாரமான - மறுக்கமுடியாத - ஆவணங்களுடனேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர்" - என்று தலிபான அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகவும் ஆப்கான் வானொலி கூறியது.

எனினும் இந்தக் கூட்டுச் சதியின் தலைவர் எனக் கருதப்படும் அமீர் ஜான் நஸாரி என்ற தளபதி தலைமறைவாகிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

1996ஆம் அண்டு தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் பெரும் பகுதியைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். அப்போது பாதுகாப்புத்துறை அமைச்சராக இருந்த அகமட் ஷா மஷூட் தலைமையிலான அரசுப் படைகள் ஆப்கானிஸ்தானின் வடபகுதியில் ஒரு பகுதியை இன்னமும் தமது கட்டுப்பாட்டிலேயே வைத்துள்ளன - என்பது குறிப்பிடத்தக்கது.

(ம)

## மஸிடோனியாவில் நேட்டோப் படைகளின் ஆதரவுடன்

# போராளிக் குழுவிடம் இருந்து வார இறுதியில் ஆயுதக்களைவு

மஸிடோனியாவில் ஆபிரிக்க அல்பேனிய விடுதலை இராணுவத்திடம் இருந்து ஆயுதங்களைக் களையும் நடவடிக்கை இந்தவார இறுதியளவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

நேட்டோப் படைகளின் ஆதரவுடன் இந்த ஆயுதக் களைவு நடவடிக்கை இடம்பெறும்.

கடந்த திங்களன்று மஸிடோனிய அரசுக்கும் ஆபிரிக்க அல்பேனிய விடுதலை இராணுவத்துக்கும் இடையில் நிரந்தர சமாதானத்துக்கான ஒப்பந்தம் கைச்சாத்தானதை அடுத்து, போராளிக் குழுவிடம் இருந்து ஆயுதங்களைக் களையும் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட உள்ளது.

ஆயுதக் களைவு நடவடிக்கையின் முதற்கட்டமாக நேட்டோவில் அங்கம் வகிக்கும் பிரிட்டிஷ் படையினர் 400 பேர் மஸிடோனியா வரவுள்ளனர்.

"பிரிட்டிஷ் படையினர் இந்தவார இறுதியில் மஸிடோனியா வருவர். அவர்கள் வந்து சேர்ந்ததும் ஆயுதக் களைவு நடவடிக்கை சிறிது சிறிதாக ஆரம்பிக்கப்படும்" - என்று மஸிடோனிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

எனினும் பிரிட்டிஷ் படையினர் எவ்வளவு காலம் தங்கியிருந்து இந்தப் பணியில் ஈடுபடுவர் என்பது குறித்து உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்படவில்லை. குறைந்தது ஒரு மாதமாவது அவர்கள் மஸிடோனியாவில தங்கியிருந்து பணியாற்றுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.(ம-10)

# பிலிப்பைன்ஸில் வெள்ளம் இதுவரை 34பேர் உயிரிழப்பு

மணிலா,ஓக.18

பிலிப்பைன்ஸின் மத்திய நகரான நெக்ரோத்தில் கடந்த ஒரு வாரமாகத் தொடர்ந்து பெய்துவரும் பருவமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு என்பவற்றில் சிக்கி 34பேர் உயிரிழந்தனர்; மேலும் 7பேரைக் காணவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

ஒரு வாரமாக இடைவிடாது மழை பெய்து வருவதால் நகரின் முக்கால்வாசிப் பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. 79 ஆயிரம் மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். மழை தொடர்ந்துகொண்டிருப்பதால் உயிர் இழந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் காரணமாக 83 லட்சம் டொலர் பெறுமதியான சொத்துக்களுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக ஆரம்பக்கட்ட மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இன்னும் வெள்ளத்தில் சிக்கிக் கொண்டுள்ளவர்களை மீட்கும் பணி துரிதமாக இடம்பெற்று வருகின்றது.

இதேவேளை -

தெற்கு மிசனாலோ பகுதியிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு 19பேர் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.



இந்திய சுதந்திர தினம் கடந்த புதனன்று இந்தியா முழுவதும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. சிறுமியொருத்தி நாட்டின் கொடியை ஏந்தியவாறு தேசிய கீதத்தை உணர்ச்சிபூர்வமாகப் பாடுவதைப் படத்தில் காணலாம்.

# பலூனில் உலகைச் சுற்றும் முயற்சியில் அமெரிக்கர் பாதி இலக்கை அடைந்தார்

பலூனில் உலகைச் சுற்றிவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க கோடீஸ்வரரான ஸ்ரீவ் பொசெற் தனது இலக்கில் அரைவாசியைக் கடந்துள்ளார். கடந்த புதனன்று அவர் ஆர்ஜென்ரீனாவில் உள்ள ஆண்டிக் மலை உச்சியைக் கடந்ததன்மூலம் அவர் இந்தச் சாதனையை நிகழ்த்தினார்.

இதுவரை அவர் 20 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்தைப் பலூனில் கடந்துள்ளார். தனி ஒருவராகப் பலூனில் இவ்வளவு தூரம் பயணித்த நபர் என்ற சாதனையையும் இதன் மூலம் அவர் நிகழ்த்தி உள்ளார்.

ஏற்கனவே நான்கு தடவைகள் இந்த முயற்சியில் ஈடுபட்ட பொசெற் அவற்றில் தோல்விகண்டுள்ளார். எனினும் அவர் இந்தத் தடவை தனது முயற்சியில் வெற்றிபெறுவார் என்றே தோன்றுகின்றது என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது. (ம-10)



ஸ்ரீவ் பொசெற் உலகைச் சுற்றும் பலூன் இதுதான்

# தமிழர்களைப் பூண்டோடு அழிக்கவே அரசு இரசாயன ஆயுதத்தை பாவிக்கமுற்படுகிறது

## அனைவரும் திரண்டு எதிர்க்க வேண்டும் என்கிறார் ஜோசப் எம். பி.

கொழும்பு, ஒக. 18

வடக்கு—கிழக்கில் தமிழ் மக்களைப் பூண்டோடு அழிக்கும் நோக்கத்துடனேயே அரசு இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்த முற்படுகின்றது. எனவே இந்த நடவடிக்கைக்கு எதிராகக் குரல் கொடுக்க அனைவரும் ஓரணியில் திரளவேண்டும்.

—இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம்.

எதிர்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் ஒன்று நேற்று நாடாளுமன்றக் குழு அறையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எம். பி. ஜோசப் பரராஜசிங்கம் மேற்படி கோரிக்கையை விடுத்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:—

யுத்த நடவடிக்கைகளில் இரசாயன ஆயுதங்களைப் பாவிப்பதைச் சட்டங்கள், உடன்படிக்கைகள், ஐ. நா. சாசனம் ஆகியவை மூலம் சர்வதேச சமூகம் தடை செய்துள்ளது.

இன்று எமது நாட்டில் நடைபெறுவது இரண்டு நாடுகளுக்கு இடையிலான போரல்ல. இது ஓர் உள்நாட்டு இனப்பிரச்சினைப் போராகும். இரசாயன ஆயுதங்களைப் பாவித்து இந்த அரசு உள்நாட்டு தமிழ் மக்களை அழிக்க முற்படுவதை நாசிசவாதிகள் யூதர்களை அழிக்க முற்பட்ட செயலுடனேயே ஒப்பிடமுடியும். இது ஒரு முழுமையான இனக்கொலை முயற்சி என்பதை எவரும் மறுக்கமுடியாது

எனவே மிகவும் ஆபத்தான — தடை செய்யப்பட்டுள்ள — இரசாயன ஆயுதங்களை அரசு கொள்வனவு செய்துள்ளதை எதிர்க்கட்சி எம்.பிக்கள் ஒருமித்த குரலில் கண்டிக்கவேண்டும். அதுமட்டுமன்றி இதனைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்ற வேண்டும் — என்றார்.

இதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தக் கூட்டம் ஆறு தீர்மானங்களை நிறைவேற்றவெனக் கூட்டப்பட்டது. எனவே அடுத்த கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றலாம் என்றும்—

இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துவது என்பது பாரதூரமான விடயம் என்றும்—

இதனைக் கண்டிக்க வேண்டியது அனைவரதும் கடமை என்றும் — தெரிவித்தார்.

# யாழ். தொழில் நுட்பக்கல்லூரி மாணவருக்கு இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக.18

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்குத் தொழில் நுட்பக் கல்வியும் பயிற்சியும் திணைக்களத்தினால் நடத்தப்படும் 2001 ஆம் ஆண்டுக்கான இறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறும் பயிற்சி நெறிகளைத் தொடரும் சகல மாணவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் தமது பகுதித் தலைவர்களிடம் ஒப்படைக்குமாறு தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் நடைபெற்ற பரீட்சைகளில் சித்தியடையாதவர்களும் பரீட்சைக்குத்தோற்றாத மாணவர்களும் தமது விண்ணப்பப் படிவங்களை ஒப்படைக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் பகல் நேரக் கற்கை நெறிகளைத் தொடரும் மாணவர்களுக்கான வகுப்புகள் அனைத்தும் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகின்றன என்றும் —

மாலை நேர வகுப்பு மாணவர்களுக்கான வகுப்புகள் அனைத்தும் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளதாகவும் —

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

(ஜ-6)


அளவெட்டி வடக்கு
அறிவொளி சனசமூக நிலைய
கட்டட வளர்ச்சி நிதிக்காக நடத்தப்படும்
மாபெரும்

**மாட்டுவண்டில் சவாரிப்போட்டி**

இடம்: கந்தரோடை சவாரித்திடல் மைதானம்

காலம்; நாளை (19-08-2001) ஞாயிற்றுக்கிழமை

நேரம்; பிற்பகல் 1 மணி

★ போட்டிகள் A, B, C என மூன்று பிரிவுகளாக நடத்தப்படும்.
★ கைக் கொடிச் சவாரியும் இடம்பெறும்
★ நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ப. உதயகுமார்
[illegible]

அளவெட்டி வடக்கு.
அளவெட்டி.

(91309)



# கேள்வி அறிவித்தல் திருத்தம்

14.08.2001 அன்று எம்மால் 'உதயன்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்த [illegible] வாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைத்திய அதிகாரிகளுக்கான [illegible] நிர்மாணித்தல் கட்டம்—1க்கான நிர்மாணப்பணிக்கு நிறுவனத்தின் (ICTAD) இக்ராட் கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு தரம் எம்-8 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப்பத்திரம் சேர்ருவதற்குத் தகுதியுடையோராவர் என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

★ மேற்படி வேலைக்கு தரம்-9 என்பது தவறானதாகும்.

பிரதம பொறியியலாளர் (க.),
கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்)
யாழ்ப்பாணம்.

(ஒ/17911)


## கருத்தரங்கு

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 7,8,9 வகுப்புக்களில் விஞ்ஞானம், சமூகக்கல்வி, சுகாதாரமும், உடற்கல்வியும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும், செயலமர்வும் இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை யாழ். கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

''சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்வியும்'' என்ற தலைப்பில் நடத்தப்படவுள்ள இந்தக் கருத்தரங்கிலும், செயலமர்விலும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது பங்குபற்றுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## விளையாட்டு வீரர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக. 18

மாகாண மட்டத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டி தேசிய மட்டப் போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட வீரர், வீராங்கனைகளுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் மாகாண மட்டத்தில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வீரர், வீராங்கனைகளையும் —

தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள மேசைப்பந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்டப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட வீரர், வீராங்கனைகளையும் —

கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஜே. எவ். ஜே. ரூபசிங்கம் அறிவித்துள்ளார்.

(ஐ-6)

## தமிழ் மாணவனை காணவில்லை

கொழும்பு, ஒக. 18

பேராதனைப் பல்கலைக் கழகப் பொறியியற் பீடத்தைச் சேர்ந்த தமிழ் மாணவன் ஒருவனைக் காணவில்லை என்று பேராதனைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பேராதனையில் உள்ள வங்கிக்குச் செல்வதாக மற்றைய மாணவர்களிடம் கூறிவிட்டுச் சென்ற இவர் மீண்டும் பல்கலைக் கழகத்திற்குத் திரும்பி வரவில்லை என்று அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரியாலையைச் சேர்ந்த மோசஸ் அன்ரன் சக்திகிதன் என்ற இந்த மாணவன் கடந்த 14ஆம் திகதி வங்கிக்குச் செல்வதாகக் கூறிச் சென்றபின்னர் இதுவரை பல்கலைக்கழகத்துக்குத் திரும்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-10)

## விளையாட்டு விழா

இணுவில் கலாஜோதி [illegible] சமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு கலாஜோதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோண்டாவில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் என். ஜெசுராசாவும், சிறப்பு விருந்தினர்களாக வலி. தெற்கு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சி. செல்வநாயகம், இணுவில் சுகாதாரப் பரிசோதகர் எஸ். சிவகுமார், இணுவில் வட கிழக்கு கிராம அலுவலர் தி. புரந்திரதாசன், குடும்பநல சேவை உத்தியோகத்தர் திருமதி த. ஜெயந்தி ஆகியோரும்கலந்துகொள்வர்.

## விபத்தில் படுகாயம்

நல்லூர் தேர் உற்சவத்திற்கு வந்து மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிய இருவர் அது விபத்துக்குள்ளாகிப் படுகாயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் — சுழிபுரம் வீதியில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சுழிபுரத்தைச் சேர்ந்த அருணாசலம் கணேசமூர்த்தி (வயது 18), பாலசுப்பிரமணியம் தேவகுமார் (வயது 17) ஆகிய இருவருமே தலையில் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்கள் சுயநினைவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-15)

# மரண அறிவித்தல்கள்

## M ஜோசப்

(ஸ்தாபகர்:- Joseph Stores pvt, Ltd, Pettah)

நாரந்தனை மேற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், 108, விவேகானந்த மேடு, கொழும்பு 13ஐ வசிப்பிடமாகவும் கொண்ட புறக்கோட்டை பிரபல வர்த்தகர் மனுவேற்பிள்ளை ஜோசப் அவர்கள் 15-08-2001 கொழும்பில் காலமானார்.

அன்னார் மேரி யோசப்பின் அவர்களின் அன்புக் கணவரும், பயஸ் நிர்மலராஜா, ஜெகதீஸ்வரன் (ஜெகன்), ஆன் ஜெயகுமாரி, ஜேம்ஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபோதினியின் மாமனாரும், ஜோன் றிச்சர்ட்சனின் அன்புத் தாத்தாவுமாவார்.

அன்னாரின் இறுதித் திருப்பலி இன்று (18-08-2001) சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பின்னர் பூதவுடல் பொரளை கனத்தை சேமக்காலைக்கு (றோமன் கத்தோலிக்கப் பிரிவு) எடுத்துச் செல்லப்பட்டு மாலை 4.30 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
ஜோ. பயஸ்
(மகன்)

108, விவேகானந்த மேடு, கொழும்பு - 13.
Tel. - 331420

(91311)

## சுப்பிரமணியம் இராசரத்தினம்

(முன்னாள் கோப்பாய் ''ராஜா ஸ்ரோர்ஸ்'', இன்னாள் இணுவில் ''பிள்ளையார் ஸ்ரோர்ஸ்'' உரிமையாளர்)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசரத்தினம் நேற்று (17—08—2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பத்மாதேவியின் அன்புக் கணவரும் ரஜீவன் (தரம் 12—வர்த்தகம்), ரஜீக்கா (தரம் 10—யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுப்பிரமணியம்—காலஞ்சென்ற அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பையா சரஸ்வதி ஆகியோரின் மருமகனும் தனிகாசலம் (சுவிஸ்), தனலட்சுமி, நவரத்தினம், யோகேஸ்வரி, தில்லைநாதன் (சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்), மனோன்மணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற தங்கச்சியம்மா மற்றும் இராசம்மா, வைத்திலிங்கம், பொன்னம்பலம், தருமலிங்கம் (இந்தியா), சின்னப்பம்மா, குமாரசாமி (கனடா), நாகம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-08-2001) சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ப. இராசரத்தினம்
(மனைவி)

இணுவில் தெற்கு,
சுன்னாகம்.

(92310)

உதயன்

## ஜே.ஆர்.பாணியில் சந்திரிகா!

ஈழத் தமிழர்களின் உரிமைக் குர லுக்கு எதிராகப் "போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம" என்று பிரகடனப்படுத்தி, தமிழர்களுக்கு எதிரா கப் பெரும்பான்மையினத்தின் போரியல் பலாத்காரத்தைக் கட்டவிழ்த்து விட் டவர் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா.

சமாதான வழிகளில் தமது உரிமை களைக் கேட்ட குற்றத்திற்காக அடக் கப்பட்ட தமிழினம், வேறு வழியின்றித் தனது பிறப்புரிமையைப் பெறுவதற்காக வீறு கொண்டெழுந்தது.

என்றாலும் கூட, தந்தை செல்வ நாயகம் முதல் தலைவர் பிரபாகரன் வரை ஈழத்தமிழர்களின் வழிகாட்டிகள் எவரும் பெரும்பான்மைச் சிங்களத் தலைமைத்துவத்துடன் சமாதான முறையில் பேசி, பிரச்சினைக்குத் தீர்வு காணும் கதவுகளை என்றைக்குமே மூடி விடவில்லை.

சிங்களத் தலைமைத்துவம்தான் காலத்துக்குக் காலம் அல்பிரட் துரை யப்பா, செல்லையா குமாரசூரியர், செல் லையா இராசதுரை என்ற வரிசையில் இன்றுவரை சலுகைகளுக்கு விலை போகும் தலைவர்களை (?) சுவீகரித்து வைத்துக்கொண்டு, ஈழத்தமிழர்களின் சரியான பிரதிநிதிகளை அடையாளம் காணாமல் - அல்லது அடையாளம் தெரியாததுபோல் நடித்துக்கொண்டு - செல்லாக்காசுத் தலைவர்களைத் திருப் திப்படுத்துவதன் மூலம் ஈழத்தமிழர்களை யும் ஏய்க்காட்டிவிடலாம் என்று நப் பாசையுடன் செயற்பட்டு வருகின்றது.

இதன் விளைவுதான் இன்று நாம் கொடூர யுத்தத்தின் பிடியில் சிக்கித் தவிக்கும் நிலை.

'போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம' என்று ஜே.ஆர். பிரகடனம் செய்து சுமார் இருபத்தி யைந்து ஆண்டுகள் - கால் நூற்றாண்டு - பூர்த்தியாகும் கட்டத்தை அடைந்தி ருக்கின்றோம்.

ஜே.ஆர். ஆட்சித் தலைமையில் இருந்து இறங்கிவிட்டார். ஆனால் அவர் மேலும் மேலும் ஏற்றிவைத்த பெரும் பான்மைச் சிங்களவரின் போரியல் பிடி வாதம் இன்னும் இறங்கவில்லை. அது தொடர்கதையாகத் தொடர்கின்றது. 'சமாதான தேவதை' என்று தன்னை முலாம் பூசிக்கொண்டு ஆட்சிக் கட்டில் ஏறிய சந்திரிகா குமாரதுங்கவும் அந்தப் பிடிவாதப் பிடியைத் தளர்த்துவதாக இல்லை. அதற்கு மேலும் மேலும் முறுக் கேற்றிக் கொண்டிருக்கிறார் அவர்.

அதன் வெளிப்பாடுதான் ஸ்ரீலங்கா இராணுவம் ஆயிரக்கணக்கான நவீன இரசாயன ஆயுதங்களைக் கொள்வனவு செய்த விவகாரம்.

இந்தக் கொள்வனவு, வாங்கப் பட்ட ஆயுதத்தின் விவரம் என்பனவெல் லாம் ஐயம் திரிபற அம்பலப்படுத்தப்பட்டு விட்டன. அதில் மறுப்பதற்கு ஏதுமில்லை.

தன்னை ஒரு சட்ட ரீதியான அரசு என்று கூறிக்கொள்ளும் இலங்கை அர சாங்கம், தனது நாட்டில், தனது மக்க ளுக்கு எதிரான உள்நாட்டு யுத்தத்தில் பயன்படுத்த இரசாயன ஆயுதங்களை வாங்கியிருப்பது என்பது ஸ்ரீலங்கா அர சின் போர்வெறிப் போக்கை அப்பட்டமாக அம்பலப்படுத்துவதாகும்.

அமெரிக்கா போன்ற நாடுகள் தடை செய்துள்ள ஆயுதங்களை ஈழப்போரில் பயன்படுத்துவதற்காக இலங்கை அரசு வாங்கியிருப்பதை அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளும், இந்தியா வும் வன்மையாகக் கண்டிக்க வேண்டும் என்று புலிகள் தரப்புக் கோரியிருப்பது நியாயமானதே. இலங்கை அரசைக் கண்டிப்பதோடு இது விடயத்தில் அதற்கு எதிராகக் கடும் நடவடிக்கையையும் எடுக்கவேண்டும். இல்லையேல் இரசாயன ஆயுதங்களை வாங்கிப் பயன்படுத்தும் இலங்கையின் போர்வெறிப்போக்கை சர்வ தேச சமூகம் அங்கீகரித்ததாகிவிடும்.

அத்தோடு "பேச்சுக்கு இன்னமும் கூடக் கதவுகள் திறந்தே உள்ளன" என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல் வன் மீண்டும் காட்டியிருக்கும் நல் லெண்ண சமிக்ஞையை சரியாகப் பற்றிப் பிடித்து ஒரு சமரசத் தீர்வுக்கு உடன் படுமாறு இலங்கை அரசை இந்த நாடு கள் வற்புறுத்தவும் வேண்டும்.

ஜே.ஆர்.ஜெயவர்தனா அறிமுகப் படுத்திய - ஜனாதிபதியிடம் அதிகாரங் களைக் குவிக்கும் - அரசமைப்பைக் கடு மையாக விமர்சித்துக்கொண்டு -

அந்த அரசமைப்பின் கீழ் ஜனாதி பதிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை ஜே. ஆரைப் போன்றே, அரசியல் சித்து விளை யாட்டுக்குப் பயன்படுத்திக்கொண்டு -

எம்.பிக்கள், அமைச்சர்களிடம் திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதங் களை வாங்கி வைத்துக்கொண்டு ஜன நாயக விரோதமான முறையில் அவர் களை அடக்கித் தனது அரசியல் மேலாதி காரத்தை அவர்கள் மீது பிரயோகித்த 'சர்வாதிகாரி' ஜே.ஆர். பாணியிலேயே தானும செயற்பட்டுக்கொண்டு -

ஜே.ஆரைப் போலவே யுத்த தீவி ரத்தை வெளிப்படுத்திக்கொண்டிருக்கி றார் சந்திரிகா.

போரினவாதத்தின் பிடியிலிருக்கும் அவரை, சமரச - சமாதான - நிலைக்கு இறக்கிக் கொண்டுவருவதற்கு சர்வ தேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண் டும். இல்லையேல் அதற்காகப் புலிகள் எடுக்கும் நடவடிக்கைகள் நியாயப்படுத் தப்படுபவையாக அமைந்துவிடும்.

## மின்சாரத்தில் கைவைக்கும் கெட்டிக்காரர்கள்...

மின்சாரம் இருக்கும் வரை மின்வெட்டுகளும் மின் தடைகளும் இருக்கும் போலிருக்கிறது. சம்சாரம் என்றிருந்தால் சச்சரவுகளுக்கு இடமிருக்காது என்று எப்படிச் சொல்லமுடியாதோ, அப்படி என்றுதான் வைத்துக்கொள்ளுங்களேன்.

இருப்பினும் மின்சாரத்துக்குப் பழக்கப்பட்டுவிட்டால் ~ அல்லது அடிமை யாகிவிட்டால் 'அது' சிறிதுநேரம் தடைப்பட்டால் கூட நாம் செயலிழந்து விடுகிறோம். அதற்குக் காரணம் முன் எச்சரிக்கையாக ~ முன் கூட்டியே மாற்று ஒழுங்குகள் எதுவும் செய்துகொள்ளாததும் ஒன்றாகும்.

மின்சாரசபை வழங்கும் மின்சாரத்தை 'நம்ப முடியாது' அது எந்த நேரமும் நம்மைக் 'கைவிடலாம்' என்ற காரணத்தால் வியாபார நிலையங்களும் அலு வலகங்களும் முன் எச்சரிக்கையாக மின்பிறப்பாக்கி இயந்திரங்களையும் வைத் திருக்கத் தொடங்கியுள்ளன. ஆனால் வீடுகளைப் பொறுத்தவரை 'அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதை'தான். அதற்குப் பதிலாக ஆகக் குறைந்தது 'சிம்னி' விளக்கையாவது பயன்படுத்தி அந்த இடைநேரத்திலும் தமது பணிகளைத் தொடரலாம் என்ற பக்குவம் நம்மில் பலருக்கு இல்லாமல் போய்விட்டது. மின்சாரம் நின்று விட்டால் அதுதான் தமக்கு 'விதி' என்று கட்டாயம் ஓய்வுக்குப் போய் விடுகிறார்கள். பெயருக்கு ஒன்றிரண்டு குப்பி விளக்குகளைக் கொளுத்தி வைத்து விடுகிறார்கள். அதுகூட இருட்டில் ஆளையாள் முட்டுப்படாமல் இருப்பதற்கும், தடக்குப் படாமல் இருப்பதற்கும்தான். இதைவிட அவர்களில் பலருக்குள்ள பெரிய கவலை '....அதனால் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கும் தடை யேற்பட்டுவிட்டதே' என்பதாகும்.

வரலாற்றுப் பதிவுக்காகவாவது அந்தச் 'சிம்னி' விளக்கைப் பற்றிக் கொஞ்சம் சொல்லத்தான் வேண்டும். இன்னும் அடைமொழியுடன் சொல்வதென்றால்




அதனைப் போத்தல் சிம்னி விளக் கென்று சொல்லலாம் எண்ணெய்விடும் பகுதியும் வெள்ளைப் போத்தலிலானது. மண்ணெண்ணெய் இருப்புத் திட்டத் தையும் அறிந்துகொள்ள முடியும். விளக்கினை மேசையில் மட்டுமல்ல, சுவரில் ஆணி அடித்து அதிலேயும் மாட்டலாம். புதிதாக இந்த விளக்கினை வாங்கும் போது அதனுடன் வெளிச்சத்தைப் பிரதிபலிக்கச் செய்யும் தகரத் தட்டொன்றும் தருவார்கள்.

சீன, ஜப்பான் தயாரிப்புக்களாக வந்துகொண்டிருந்த அந்த விளக்குகள்தான் அப்போதெல்லாம் எமக்குக் 'கதி'யாகவிருந்தது. ஆரம்பத்தில் குப்பி விளக்கொளியில் படித்துப் பழகிய எமக்கெல்லாம் பிற்காலத்தில் இந்த விளக்குகள் ஒரு வரப்பிரசாதம் என்றுதான் சொல்லவேண்டும். அரிக்கன் லாம்பு காற்றுக்கு நின்றுபிடிக்கும் என்றால் இந்த விளக்கு வெளிச்சத்தை அள்ளி வழங்கும் என்று சொல்லலாம்.

மின்சாரம் கிராமங்களை எட்டிப் பார்த்தது அநேகமாக எழுபதுகளுக்குப் பின்னர்தான். அதுவரை எல்லா வீடுகளிலும் இந்தச் சிம்னி விளக்குகள்தான். அப்பொழுதெல்லாம் இங்கு கண்ணாடித் தொழிற்சாலைகளும் இருந்த, அங்கெல் லாம் இந்த விளக்குகளுக்கான 'சிம்னி'களும் தயாரிக்கப்பட்டன என்றால் உங்களால் நம்பமுடிகிறதா? இவ்வளவு தூரம் இதனைச் சொல்வதற்குக் காரணம், எங்காவது இப்படியான விளக்குகளைக் கண்டால், வாங்கத் தவறாதீர்கள். மின் தடை ஏற்பட்டாலும் படிப்புக்குக் 'கட்' போடவேண்டியிருக்காது.

யாழ்ப்பாணத்தில் திருட்டு மின்சாரம் பெறுவதாலும் மின்கம்பங்களுக்கு சைக்கிள் செயின் எறியும் செயல்களாலும் கூட மின் வழங்கலில் பாதிப்புக்கள் ஏற்படுகிறதாம். சென்ற வாரம்தான் யாழ்.மக்களின் கெட்டித்தனங்கள் பற்றிச் சொல்லியிருந்தேன். அதற்குத் திருஷ்டி பரிகாரமாக இந்தக் 'கெட்டித்தனங்களும்' அமைந்து விட்டதோ...!

இந்த மின்தடையும் சுழற்சிமுறை மின்விநியோகங்களும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் காலத்துக்கு காலம் அமுல்படுத்தப்படுவதுண்டு. அங்கெல்லாம் நீர்மின்சாரமே வழங்கப்படுவதால் நீரேந்து பகுதிகளில் நீர்மட்டம் குறைந்துவரும் சமயங்களில் அங்கும் இதெல்லாம் நடை பெறுவதுண்டு. நான் இதனை எழுதிக் கொண்டிருக்கும் வேளையில் கூட அங்கும் ஒன்றரை மணித்தியால மின்வெட்டு இருக்கிறதாம்.

இருப்பினும் சொல்லாமற் கொள்ளாமல் மின்சாரம் நின்றுவிட்டால் அதுவே அங்கு செய்தியாகிவிடுகிறது. மனிதன் நாய்க்குக் கடித்தால் செய்தி என்பதுபோல...

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பிலே சில நிமிடங்கள் மின்சாரம் நின்றுவிட அதையே எல்லோரும் பேசிக் கொண்டார்கள். அடுத்த நாள் பத்திரிகை களில் அது செய்தியாகிவிட்டது. மின்தடைக்குக் காரணம் "இயந்திரக்கோளாறா? சதி முயற்சியா?' என்ற செய்தி விமர்சனங்கள் வேறு... பின்னர் விசாரணைக் கமிஷன் என்று, அது வேறு... (விசாரணைக் குழு முடிவு பற்றி என்னை ஒன் றும் கேட்காதீர்கள்)

மேல்நாடு ஒன்றிலும் இப்படி ஒரு செய்தி நடந்திருக்கிறதாம். அங்கும் என்று மில்லாதவாறு ஒரு நாள் இரவு சில நிமிட மின்தடை... அதன் விளைவு பத்தாவது மாதம் அங்கு எடுக்கப்பட்ட புள்ளிவிவரக் கணக்கின் படி உற்பத்தி விகிதம் ஒன்றில் வழக்கத்தைவிட மிகப் பெரிய அதிகரிப்புக் காணப்பட்டதாம். அதென்ன வாகவிருக்கும்...?

"கைக்கடிகாரங்களா?" ~ "இல்லை இல்லை"
"தையல் இயந்திரங்களா?" ~ "இல்லை இல்லை"
"கணனிப் பொறிகளா?" ~ "இல்வே இல்லை"
"அப்படி என்றால்" ~ 'குவா..குவா..'க்கள்தானாம்"

~சண் அங்கிள்.

### கூட்டம்

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர் வரும் 21ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பருத்தித்துறை பிரதேச செயலர் மாநாட்டு மண்டபத்தில் பிர தேச செயலர் ஆசிவசுவாமி தலை மையில் நடைபெறும். (ஐ-117)

### உதயவாக்கு

அரசியல் இயக்கத்துக்கு யோக்கி யமும் நாணயமும் உள்ள மக்கள் தேவை. ஆனால் யோக்கியமும் நாண யமும் உள்ள மக்களுக்கு அரசியல் இயக்கம் தேவையில்லை.

### நாளை

ஆவணி 3
ஞாயிற்றுக்கிழமை
திதி: அமாவாசை
முற்பகல் 9.18 வரை
நட்சத்திரம் : மகம்
பின்னிரவு : 4.19 வரை
மரணயோகம்
சுபநேரம்: 9.05 - 10.35
ராகுகாலம் : 4.35 - 6.05
(பழைய நேரப்படி)

## நாட்டு நடப்பு

**நல்லைத் திருப்பள்ளி எழுச்சி**

**பற்பல வீட்டிலிருந்து மெய் அடியார்**
**பானை சட்டியுடன் படையெடுக்கின்றார்**
**சிற்சில வீட்டில் அழுகுரல் கேட்க**
**சேகரிக்கின்றார் சிதறிய உடலை**
**மற்றைய வீட்டினர் மண்ணினைத் தோண்டி**
**மறைக்கின்றார் தம் உறவினர் உடலை**
**அற்புதமாகவே அரும் சமர் புரிந்தோய்**
**ஆறுமுகவனே! பள்ளி எழுந்தருளாயே!**

**- *விகடகவி.***

### தென்மராட்சி வலயத்தில்

# 21 பாடசாலைகளுக்கு தளபாடங்கள் கிடைக்கும்

தென்மராட்சிக் கல்வி வலயத் தைச் சேர்ந்த 21பாடசாலைகளுக்கு தளபாடங்கள் கொள்வனவு செய் வதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் 21 லட் சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த பத்துப் பாடசாலைகளுக்கும், தென்ம ராட்சிப் பிரதேசத்தைச் சோந்த 11 பாடசாலைகளுக்கும் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

கிளாலி றோ.க.த.க. பாடசாலை, பளை றோ.க.த.க பாடசாலை, மாசா அ.த.க. பாடசாலை, இயக்கச்சி அ. த.க. பாடசாலை, சோரன்பற்று கணேசா வித்தியாலயம், முகாவில் அ.த.க. பாடசாலை, தர்மக்கேணி அ. த.க. பாடசாலை, கோவில் வயல் அ.த.க.பாடசாலை, முகமாலை றோ.க.த.க. பாடசாலை, சோரன்பற்று சீ.சீ.த.கபாடசாலை, கச்சாய் அ.த. க.பாடசாலை, வரணி மகாவித்தியா லயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி, வரணி வடக்கு அ.த.க. பாடசாலை, கைதடி விக்னேஸ்வரா வித்தியால யம், கைதடி கலைவாணி வித்தி யாலயம், கைதடி எருதிடல் அ.த.க. பாடசாலை, கைதடி சேதுகாவலர் வித்தியாலயம், கொடிகாமம் திரு நாவுக்கரசு மகாவித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியா லயம், இடைக்குறிச்சி சுப்பிரமணி யம் வித்தியாலயம் ஆகிய பாட சாலைகளுக்கே தளபாடங்கள் கொள் வனவு செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது (ஐ-117)

# நிவாரணம் பெறுவோருக்கு மீண்டும் முத்திரை விநியோகம்

குடாநாட்டு மக்களுக்கு எதிர் வரும் செப்ரெம்பர் மாதத்தில் இருந்து மீண்டும் உணவு முத்திரைகளுக்கே நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட வுள்ளன.

இவ்வாறு யாழ். செயலக உத வித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். நல்லையா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

ஆரம்பகாலத்தில் நிவாரணப் பொருள்கள் முத்திரைகளுக்கே விநி யோகிக்கப்பட்டு வந்தன. ஒரு கப்ப லில் ஏற்றிவரப்பட்ட முத்திரைகள் அந்தக் கப்பலுடன் சேர்ந்து கடலில் மூழ்கிய தால் சிறிது காலம் இந்த நடைமுறை தடைப்பட்டுப் போயிருந் தது.

அதனையடுத்து முத்திரைப் புள்ளிகளுக்குப் பதிலாகப் பட்டியல் களுக்கே நிவாரணம் விநியோகிக் கப்பட்டு வந்தது.

தற்போது கப்பல் மூலம் உணவு முத்திரை அட்டைகள் எடுத்துவரப் பட்டுள்ளன. எனவே மீண்டும் இந்த நடைமுறை அமுலுக்கு வருகிறது.

எதிர்வரும் செம்ரெம்பர் மாதத் தில் இருந்து உணவு முத்திரைக ளுக்கே நிவாரணம் வழங்கப்படும்.

இதற்கு ஏதுவாக எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் கிராம சேவகர்களூடாக உணவு முத்திரை கள் பொதுமக்களுக்கு விநியோகிக் கப்படவுள்ளன.

தற்போது ஒவ்வொரு குடும்பங்க ளுக்கும் வழங்கப்படும் நிவாரணப் பொருள்களின் பணப் பெறுமதிக்குச் சமனான முத்திரை அட்டைகள் வழங்கப்படவுள்ளன. (ஐ-6)


## கல்வி அலுவலகத்துக்கு 'பிக்-அப்' வாகனம்

வடமராட்சி கல்வி வலயத்துக்கு 'பிக்-அப்' வாகனம் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

கப்பல் மூலம் காங்கேசன் துறைக்கு கொண்டுவரப்பட்டுள்ள இந்த வாகனம் அடுத்த வாரமளவில் வலய அலுவலகத்துக்கு வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

வலய அலுவலகத் தேவைக்கு தற்போது ஓட்டோ வாகனம் பயன் படுத்தப்பட்டு வருகிறது. (ஐ-117)

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!




மேலேயுள்ள இரண்டு படங்களுக்குமிடையில் ஆறு வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்ப்போம்

# தொழில் அடையாள அட்டையை மீளப் பெறவும் பொலீஸ் அனுமதி

அரச திணைக்களங்களில் கடமையாற்றிவரும் ஊழியர்கள் தங்கள் தொழில் அறிமுக அடையாள அட்டையைத் தொலைத்துவிட்டால் புதிய தொழில் அறிமுக அட்டையைப் பெறுதற்கு பொலீஸாரின் அனுமதிக் கடிதம் பெறவேண்டும்.

இவ்வாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அண்மையில் தமது தொழில் அறிமுக அடையாள அட்டையைத் தவறவிட்ட ஊழியர் ஒருவர் அதனை மீண்டும் பெறுவதற்கு தமது திணைக்களத்திற்கு விண்ணப்பித்தபோது பொலீஸாரின் அனுமதிக் கடிதம் பெற்றுக்கொண்டு வருமாறு அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

தேசிய அடையாள அட்டை, இராணுவ அடையாள அட்டை ஆகியவற்றைத் தொலைத்தவர்கள் புதிய அடையாள அட்டையைப் பெறுவதற்கு பொலீஸ் பதிவுக் கடிதம் பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற விதி ஏற்கனவே அமுலில் இருப்பது தெரிந்ததே.

## வவுனியாவில் மூவர் கைது

வவுனியா,ஓக.18

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து வவுனியாவுக்கு வந்த மூவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு, விஸ்வமடுவைச் சேர்ந்த ஆறுமுகம் அசோகன் (வயது 22), புதுக்குடியிருப்பைச் சேர்ந்த காளிக்குட்டி சீனிவாசன் (வயது 28), வடமராட்சி, மாலுசந்தியைச் சேர்ந்த தர்மலிங்கம் நடேசன் (வயது 46) ஆகிய மூவருமே படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகம் அறிவித்துள்ளது. (உ-10)

## மேஜர் காயம்

வவுனியா,ஓக.18

வவுனியா, பறையனாலங்குளம் பகுதியில் கடந்த புதனன்று இரவு 8.15 மணியளவில் படையினரின் முன்னணிக் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவ மேஜர் ஒருவர் காயமடைந்தார். இவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவுனியாப் படைத்தரப்பு தெரிவித்துள்ளது. (உ-10)

## கலைநிலா அரங்கம்

யாழ்ப்பாணம்,ஓக.18

யாழ்.திருமறைக்கலாமன்ற மாதாந்த கலைநிலா அரங்க நிகழ்ச்சிகள் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.45 மணிக்கு மன்ற அரங்கில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் கவிதாஞ்சலி, நடனம், குழுப்பாடல் ஆகியவற்றுடன் 'சத்தியசோதனை' என்ற இசை நாடகமும் மேடையேற்றப்படவுள்ளன. (ஐ-6)

## மட்டக்களப்பில் இருவர் கைது!

கொழும்பு,ஓக.18

மட்டக்களப்பு ஓட்டமாவடியில் கடந்த புதனன்று சித்தாண்டியைச் சேர்ந்த சின்னவன் விக்னேஸ்வரன் (வயது 21) என்பவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, விசாரணைக்காக வாழைச்சேனைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இவரிடமிருந்து கைக்குண்டு ஒன்று கைப்பற்றப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது. (உ-ஓ)



வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாகப் பதவி ஏற்பு வைபவத்தில் புதிய தலைவர் லயன் எஸ்.தங்கநவமணிநாதன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட லயன்ஸ்கழகங்களின் பிராந்தியத் தலைவர் லயன் ஆர்.நடராஜா அருகில் அமர்ந்துள்ளார். (படம்: வடமராட்சி செய்தியாளர்)


# ஓராண்டு நினைவலைகள்

பிறப்பு 1972 - 09 - 15



இறப்பு 2000 - 08 - 18

**அமரர் செல்லத்துரை கனகராசா (பாபு)**

பாசமுடன் உன்னுடன் வாழ்ந்த ஆறாண்டுகள்
பஞ்சாகப் பறந்து விட்டதுவே!
பாசமிகு உன் பாலகர்களின் கண்கள்
ஓராண்டு போனாலும் உன்னைத் தேடுகின்றனவே
பாபு எனும் சொல்லைக் கேட்டால் உன் பாசமுகம்
புன்னகைக்கும் எம் இதயத்திலே!

எம் வாழ்நாளில் உன் நினைவுடனே
வாழத்துடிக்கும்:

க.சாந்தி (மனைவி),
பிள்ளைகள்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தற்போதைய முகவரி.
எபநேசர் ஆலயம்,
வட்டுக்கோட்டை.

(91296)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 21 - 03 - 1978



உதிர்வு 15 - 09 - 1996

**சந்திரசேகரம் சந்திரகாந்தன்**

(யா/மகாஜனக் கல்லூரி மாணவன்)

எங்கள் அன்புச் செல்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும் பிரார்த்திக்கும்:

பாசமுள்ள அம்மா,
அண்ணாமார், அண்ணி
மற்றும் உற்றார், உறவினர்கள்.

பண்ணாலை,
தெல்லிப்பழை. (91270)

# தேவை

சங்கானையில் இயங்க இருக்கும் சினிமா தியேட்டருக்கு (CINEMA THEATRE) ஒப்பறேட்டர் தேவை. நாளை (19.08.2001) ஞாயிறு காலை 9 மணி தொடக்கம் 2 மணி வரை நேரில் சமுகம் தரவும்.

- முகாமையாளர்.

நிரஞ்சனாஸ்,
சங்கானை. (91143)

# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**தம்பசிட்டி மாயக்கைப்பதி ஸ்ரீ சித்திவிநாயகர்**

ஆலயத்தின் திருத்த வேலைத் திருப்பணிகளுக்காக ரூபா 200,000 நிதி ஒதுக்கீடு செய்து அதில் முதற்கட்டமாக ரூபா 100,000 தந்து ஆலய வளர்ச்சிக்கு உதவியவர்களான,



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் இந்து கலாசார அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமாகிய மாண்புமிகு

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கும்



ஈ.பி.டி.பி. கட்சியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கௌரவ

**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**

அவர்களுக்கும்



எமது அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய எமது நலனில் மிகுந்த அக்கறையுள்ள பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவரும், ஈ.பி.டி.பி. கட்சியின் வடமராட்சி அமைப்பாளருமாகிய உயர்திரு.

**ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் (J.P.U.M.)**

(ரங்கன்) அவர்களுக்கும்

எமது ஆலய வளர்ச்சியில் அக்கறைகொண்டு நிதி வழங்கியமைக்காகப் பாராட்டி வாழ்த்துக்கூறி, எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேற்படி ஆலய தர்மகர்த்தா சபை
தம்பசிட்டி மாயக்கைப்பதி
ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்.

புலோலி மேற்கு,
பருத்தித்துறை. (91283)

# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**வத்தனை, புலோலி மேற்கு, பருத்தித்துறை கலைவாணி சனசமூக நிலையத்தின்**

*மாடிக் கட்டட நிர்மாண வேலைகளுக்காக ரூபா 5,00,000 நிதி ஒதுக்கீடு செய்து, அதில் முதற்கட்டமாக ரூபா 2,50,000 தந்துதவி எமது சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்டு உதவியமைக்காக,*



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் இந்து கலாசார அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமாகிய மாண்புமிகு

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கும்



ஈ.பி.டி.பி. கட்சியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கௌரவ

**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**

அவர்களுக்கும்



எமது சனசமூக நிலையக் கட்டடத்துக்கு அடிக்கல் நட்டு வைத்தவரும், அதன் வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்தவருமான பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பியின் வடமராட்சி அமைப்பாளருமான உயர்திரு.

**ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் (J.P.U.M.)**

(ரங்கன்) அவர்களுக்கும்

எமது சனசமூக நிலையத்தின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு எமக்கு உதவியமைக்காக அவர்களைப் பாராட்டி வாழ்த்துக்கூறி, எமது உளங்கனிந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- நிர்வாகத்தினர்.
கலைவாணி சனசமூக நிலையம்.

வத்தனை,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை. (91282)

ஈராண்டு ஆகுமுன்பே எண்ணற்ற இனிய நெஞ்சங்களைத் தன்னகத்தே இணைத்துக்கொண்ட

## மகா சில்க்ஸ் புடைவை அகத்துக்கு

# இன்று இரண்டாவது பிறந்தநாள்



வானம்விட்டு மண்ணில் வந்த வானவில்லோ? இல்லை வாரி இறைத்துவிட்ட பலவர்ண மழையோ? இல்லை இல்லை, ஞாலத்தில் நிகரிலா 'மகா சில்க்ஸ்'இன் வண்ணம் உண்மைக்கோலம், இது பட்டுச்சேலைகளின் வர்ணம்.

இதமாக நடைபயின்று ஈரண்டைப் பூர்த்திசெய்யும் இந்நாளில் தன்னோடு இணைந்துகொண்ட அன்பு நெஞ்சங்களுக்கும், சக வர்த்தகப் பெருமக்களுக்கும், இனியும் இணையும் அனைத்து உள்ளங்களுக்கும் தனது இதயபூர்வ நன்றிப்பெருக்கை அள்ளிவழங்கும்

# மகா சில்க்ஸ்

நாளுக்குநாள் மேவும் இந்நாகரிக உலகில், நீடித்த பாவனைக்காக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட

☆ ஸ்கேட் அன் பிளவ்ஸ் ☆ கவுன் ☆ பஞ்சாபி ☆ சாறி, சாறிக்கேற்ற பிளவ்ஸ் தினுசுகள், ☆ ஆண்கள், சிறுவர், சிறுமியர்களுக்கான ஆடைகள் மற்றும் ☆ மங்கள வைபவங்களுக்கான பட்டுப்புடைவைகள், இன்னோரன்ன பல ரக தினுசுகளின் மகத்தான தெரிவுக்கு,

**மகா சில்க்ஸ்**

32, 40A, நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

(C/17905)

### தகுதிகாண் ஆசிரியர் தெரிவு

# தென்மராட்சி, வடமராட்சி வலயங்களில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம்,ஓக.18

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்மொழிமூல அரச பாடசாலைகளில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கான தமிழ்மொழிமூல தகுதிகாண் ஆசிரியர்களை ஆள்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெற இருப்பது தெரிந்ததே.

தென்மராட்சி வலயத்திலிருந்து 69 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 23ஆம், 24ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் உள்ள தென்மராட்சி கல்வி வலைய அலுவலகத்தில் நடைபெறும்.

வடமராட்சி கல்வி வலயத்தில் இருந்து 84பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 22ஆம், 23ஆம் திகதிகளில் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் பெயர் விவரம் வருமாறு:-

**தென்மராட்சி வலயம்**

*கணிதம்*

கந்தசாமி விக்னரூபன் (கரம்பைக்குறிச்சி கிழக்கு, வரணி), சோமசுந்தரம் செந்தில்ராஜ் (தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி), வைகுந்தராசா ரஜனிகாந்த் (சிவன்கோயிலடி, சாவகச்சேரி), திருநாவுக்கரசு ஞானவேல் (கச்சாய் வீதி, சாவகச்சேரி), கார்த்திகேசு குணரத்தினராசா (கைதடி மேற்கு), கணேசமூர்த்தி செல்வநந்தினி (கல்வயல், சாவகச்சேரி), முகந்தினி வல்லிபுரம் (நுணாவில் மேற்கு, சாவகச்சேரி), முத்துலிங்கம் பாலரூபன் (பொற்கொல்லர் வீதி, சாவகச்சேரி), செல்லையா சுகந்தினி (மாவடிப்பிள்ளையார் வீதி, மீசாலை), சின்னையா சிவசாந்தி (வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்), நடராஜா தமிழ்ச்செல்வன் (கைதடி தெற்கு), நாகேஸ்வரன் லவணன் (கல்வயல் வீதி, சாவகச்சேரி), சந்திரேசா ராஜமோகன் (கைதடி நாவற்குழி, கைதடி), முருகேசு சுதர்சன் (அத்தியடி வீதி, கொடிகாமம்), சுந்தரம்பிள்ளை மயூரன் (பெரியமாவடி வீதி, சாவகச்சேரி), கணேசன் பிரியந்தன் (நூலக வீதி, மட்டுவில் வடக்கு), கணேஸ் வேணுகோபன் (கிளாலி வீதி, எழுதுமட்டுவாழ்), அருணாசலம் அருள்ரஞ்சினி (மாசேரி, வரணி).

*ஆரம்பக்கல்வி*

வேல்சாமிபாலன் லோஜிதா (மிருசுவில் வடக்கு, மிருசுவில்), சண்முகம் சசீபன் (தவசிகுளம், கொடிகாமம்), நடராஜா முகுந்தா (கிராம்புவில், சாவகச்சேரி), சௌந்தர்ராஜன் கௌசல்ஜா (சிவன்கோயில் வீதி, சாவகச்சேரி), தர்மலிங்கம் தர்மினி (தெய்வங்கேணி வீதி, சரசாலை வடக்கு), சுப்பிரமணியம் சிவரூபன் (கார்த்திகேசு வீதி, மீசாலை மேற்கு), முருகர் நகுலேஸ்வரி (தாவளை இயற்றாலை, கொடிகாமம்), இரட்ணவரதர் தவரூபி (நுணாவில் மேற்கு, சாவகச்சேரி), சின்னத்துரை ரஞ்சனா (இயற்றாலை வரணி), கந்தசாமி சத்தியநந்தன் (மருதடி மேற்கு, சாவகச்சேரி), சிவசம்பு மஞ்சுளா (மருதங்குளம், மட்டுவில் தெற்கு), கனகரத்தினம் தனுராஜ் (கனியார் ஒழுங்கை, சாவகச்சேரி), ஜெகதீஸ்வரன் தீபாசினி (மகளிர் கல்லூரி வீதி, சாவகச்சேரி), ராஜரத்தினம் புனிதமலர் (கச்சாய் வடக்கு, கொடிகாமம்), சுப்பிரமணியம் சுபாசினி (கல்வயல், சாவகச்சேரி), கனகசேகரம் ரூபகரன் (வேதவனப்பிள்ளையார் கோயில் வீதி, கல்வயல், சாவகச்சேரி), சதாசிவசர்மா கேமநந்தினி (மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி), சின்னவிபற்குலேந்திரன் (கைதடி தெற்கு, கைதடி), குலசேகரம் அகல்யா (வாகையடி வீதி, மட்டுவில் தெற்கு), சிவசுப்பிரமணியம் சுஜாதா (உசன், மிருசுவில்), விநாயகமூர்த்தி நந்தகோபன் (மீசாலை வடக்கு, கொடிகாமம்), சிவசுப்பிரமணியம் விஜித்தா (உசன், மிருசுவில்), பத்மநாதன் சாலினி (மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி), அந்தோனிப்பிள்ளை ஜோன் கொலின் (கச்சாய் வீதி, சாவகச்சேரி), அருணாசலம் மீனலோஜினி கிராம்புவில், சாவகச்சேரி), கணேசன் அபிராமி (நூலக வீதி, மட்டுவில் வடக்கு), சுப்பிரமணியம் கவிதா (மீசாலை கிழக்கு, மீசாலை), பூபாலசிங்கம் செந்தில்குமரன் (வில்சன் நூலக வீதி, மட்டுவில் கிழக்கு), சுப்பிரமணியம் கருணாநிதி (கரம்பைக்குறிச்சி, வரணி), முருகேசு புனிதவதி (புகையிரதநிலைய வீதி, கொடிகாமம்), சுப்பிரமணியம் பவளராணி (கார்த்திகேசு வீதி, மீசாலை மேற்கு), நடராஜா திருச்செல்வி (மாசேரி, வரணி வடக்கு), தியாகராசா கவிதா (மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி), வேலுப்பிள்ளை கமலரூபன் (விடத்தற்பளை, மிருசுவில்), மாணிக்கம் தவரூபன் (விடத்தற்பளை, மிருசுவில்), சிவசம்பு சியாமளா (மருதங்குளம், மட்டுவில் தெற்கு), சின்னத்துரை சுரேஷ்நாதன் (மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி).

சண்முகநாதன் சுவேதா (மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி), முருகேசபிள்ளை கமலாம்பிகை (உசன், மிருசுவில்), குலசேகரம் கணகேஸ்வரி (நாவலடி, கொடிகாமம்), முருகேசு ஜசிந்தா (கரம்பைக்குறிச்சி கிழக்கு, வரணி), சின்னத்தம்பி வேணுகா (டச்சு வீதி, சாவகச்சேரி), செல்வரத்தினம் திருமகள் (நூலக வீதி, மட்டுவில் வடக்கு), குலசேகரம் அஜந்தா (வாகையடி வீதி, மட்டுவில் தெற்கு), கந்தையா உமாவதி (நெசவுசாலை வீதி, மட்டுவில் வடக்கு), ரட்ணம் நவரஞ்சினி (அரசவிடுதி, வைத்தியசாலை வீதி, தெஹிவளை), கணேசன் பிரபாதேவி (கல்வயல், சாவகச்சேரி), பாலசுப்பிரமணியம் குகதர்சினி (இல.101, ச.வை.எஸ்., மிருசுவில்), சின்னராசா சோபனா (உசன் மிருசுவில்), மகேந்திரன் பாமினி (262, கச்சாய் வீதி, சாவகச்சேரி), மார்க்கண்டு விமலாதேவி (மந்துவில் கிழக்கு, கொடிகாமம்).

**வடமராட்சி வலயம்**

சுப்பிரமணியம் சுதாகரன் (வெற்றிலைக்கேணி, முள்ளியான்), சிவமலர் வேலுப்பிள்ளை (ஆழியவளை, தாளையடி), வாரித்தம்பி பிரபாகரன் (ஆழியவளை, தாளையடி), தங்கராஜா ஞானானந்தன் (செம்பியன் பற்று தெற்கு, தாளையடி), நடேசு சற்குணேஸ்வரன் (செம்பியன்பற்று தெற்கு, தாளையடி), சங்கரப்பிள்ளை சிவமாலதி (அம்பன், குடத்தனை), கணேசலிங்கம் பத்மமலர் (ஆழியவளை, தாளையடி), சிறீவதனி சிறீஸ்கந்தராஜா ('சீறிஸ்தான்', துன்னாலை, கரவெட்டி), பேபிரஞ்சனா காசிப்பிள்ளை (ஆழியவளை, தாளையடி), வதனா சதாசிவம் (நாகர்கோயில் தெற்கு), செல்லையா சிவவதனி (மருதங்கேணி, தாளையடி), சங்கரப்பிள்ளை சிவகுமார் (வத்திராயன் தெற்கு, தாளையடி), பசுபதி சிவானந்தன் (ஆழியவளை, தாளையடி), கந்தசாமி ஆனந்தபவானி (வத்திராயன் தெற்கு, தாளையடி), வேலாயுதம்பிள்ளை இந்திராதேவி (வத்திராயன் வடக்கு, தாளையடி), துரைசிங்கம் ஜெயவதனி (மருதங்கேணி தெற்கு, தாளையடி), கணபதிப்பிள்ளை புஷ்பவதனி (வத்திராயன் வடக்கு, தாளையடி), ஆதிமுத்துலிங்கம் பாஸ்கரன் (தபாற்கந்தோரடி, குடத்தனை), அல்போன்ஸ் ஜியோட்ஸ் இன்பராஜ் (தாளையடி மேற்கு, தாளையடி), ராம்லால்ட் மருதநாயகம் துஷ்யந்தி (செம்பியன்பற்று வடக்கு), குணரட்ணம் கோபாலன் (மருதங்கேணி, தாளையடி), நடராஜசுந்தரம் பாலமதி (செம்பியன்பற்று தெற்கு), சோபியா கலைவாணி திருச்செல்வம் (செம்பியன்பற்று வடக்கு), சிவப்பிரகாசம் சந்திரிகாதேவி (தலைவாசல், வியாபாரிமூலை).

வல்லிபுரம் மஞ்சுளா (அல்வோலை, புலோலி மத்தி), சிவஞானசுந்தரம் சுபாசினி (பிராமணத் தெரு, தும்பளை), தவரஞ்சினி கதிர்காமத்தம்பி ('லக்ஷ்மி பவனம்', அல்வாய் வடமேற்கு), நடராஜா பவானி ('வாணி இல்லம்', சாரையடி, புலோலி தெற்கு), விஜித்ரா கணபதிப்பிள்ளை (பாரதியடி பூங்கா, அல்வாய் வடமேற்கு), சிவராஜா மேரிடர்சினி (புலோலி தெற்கு, வசாவிளான்), யசோதா தர்மலிங்கம் (அல்வோலை, புலோலி மத்தி), நவரட்ணம் கேதீஸ்வரா ('யோக வாசா', நெல்லட்டை, பருத்தித்துறை), சோமசுந்தரம் மலர்விழி (கார்த்திகேசர் வீதி, புலோலி மேற்கு), சின்னையா சிவச்செல்வி (தம்பாலடி, பொலிகண்டி), பவானி சற்குணலிங்கம் (ஆண்டியாவளவு, புலோலி தெற்கு, புலோலி), சிவராஜா தமயந்தி (பாமர் வளவு, புலோலி வடக்கு, பருத்தித்துறை), இரட்ணசிங்கம் லலிதா (சிவன் கிழக்கு ஒழுங்கை, தும்பளை வீதி), பரஞ்சோதி கௌசல்யா (காரக்கட்டம்புலம், பொலிகண்டி), மாணிக்கவாசகர் வாசுகி (தெணிக்கவல்லை புலோலி மேற்கு), பிரேமினி கணேசமூர்த்தி ('திருவடிநிழல்', அல்வாய் வடமேற்கு), செல்வராஜா சோபிதா ('சிவ இல்லம்', பொலிகண்டி), வீரப்பிள்ளை பார்த்திபன் (வீரபத்திரன் கோயிலடி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை), சாரதாதேவி கந்தசாமி (வாரியார் வளவு, அல்வாய் மேற்கு), செபஸ்ரியான் பிள்ளை ஜோசப் ஜேசுராஜா (பழைய டச்சு வீதி, அல்வாய் வடக்கு), இராசகுரு பிரகலாதன் (பாற்சந்தை வீதி, பொலிகண்டி), சின்னராஜா முகுந்தன் (அல்வாய் வடமேற்கு, அல்வாய்), கிருஷ்ணன் சுகிர்தானந்தம் (செட்டியா ஊர், தொண்டமனாறு), யசோ பாலச்சந்திரன் (திக்கிரி ஒழுங்கை, தும்பளை), பி.மகாதேவி புலோலி மேற்கு, பருத்தித்துறை), எம்.ஜெயதாஸ் ('ராணி பவனம்', புலோலி மேற்கு), மார்க்கண்டன் சசீந்திரன் (துங்கா தோட்டம், இமையாணன் கிழக்கு உடுப்பிட்டி), பரஞ்சோதி சசிவண்ணன் ('செல்வஜோதி,' அல்வாய்), நாகரட்ணம் நந்தகுமார் (ராணிமில், ஒழுங்கை நெல்லியடி), ஆர். கேதீஸ்வரன் (காளிகோயிலடி, துன்னாலை தெற்கு), வல்லிபுரம் சதீஸ்வரன் (தர்சனிபுரம், அல்வாய்), மகாலிங்கம் பிரசாந்தன் (நவிண்டில், கரணவாய் வடக்கு), சிவராஜா அருள்ராஜன் (கூதாவளை, கரணவாய் கிழக்கு), பொன்னுசாமி லதா (அம்மன் கோயிலடி, கரணவாய் தெற்கு), பராசக்தி தியாகராஜா (சாப்தலை, துன்னாலை தெற்கு), சின்னத்துரை சேதுலிங்கம் சாந்தம். (குறுக்கட்டு வீதி, துன்னாலை கிழக்கு), இராஜரட்ணம் உதயகுமார் (கதிர்காம கோயிலடி, வதிரி), தர்மன் நகுலேந்திரன் ('செல்வமாகல்' தேவரையாளி, கரவெட்டி), ஈஸ்வரநாதன் தயாபரன் (வட்டுவத்தி, கரணவாய் கிழக்கு), வேலாயும் சுதா (பட்டாம் தோட்டையடி, கரணவாய் கிழக்கு), மயில்வாகனம் திருமகள் (மோடம்சீமா, அல்வாய் கிழக்கு), தாரணி தயாளன் ('செல்வபவனம்', வெலிக்கம்தோட்டம், துன்னாலை கிழக்கு), சிவலிங்கம் சிவச்செல்வன் (வெள்ளெருவை, அல்வாய் கிழக்கு), கதிர்காமநாதன் சுதர்சன் (கஞ்சம்பதி, கரவெட்டி மத்தி), கலைஞானசுந்தரி கணேசமூர்த்தி மடத்தடி அல்வாய், கிழக்கு), பேரானந்தம் உஷாயினி (காராளர் வளவு, அல்வாய் கிழக்கு), வேலும் மயிலும் மதிவதனன் (அம்மன் கோயிலடி, வதிரி), தங்கராஜா சத்தியவதனா ('பாமாவாசா', துன்னாலை தெற்கு), சுப்பிரமணியக்குருக்கள் சிவானந்தம் (குருக்கள் பகுதி, கரணவாய், கரவெட்டி), இராசையா மாலினி (சுப்பிரமணியம் வீதி, அல்வாய் மேற்கு), தர்மராஜா மகிந்தன் (பஞ்சுதோட்டம், அல்வாய் தெற்கு), கனகநாயகம் ஜெயதாஸ் (புதுகலட்டி அல்வாய், கிழக்கு), முருகேசு சுகிர்தா (பெரியதோட்டம், கரவெட்டி கிழக்கு), ஆதிமுத்துலிங்கம் அனுசியா (மடத்தடி, அல்வாய் கிழக்கு), மரயானந்தம் சுகந்தன் (அண்ணா சிலையடி, கரணவாய் கரவெட்டி), கனகரட்ணம் ரஜிதா (மகாத்மா வீதி, நெல்லியடி), செல்வி குணசிங்கராஜா கங்கா (கங்காவதி, கம்பர்மலை, வல்வெட்டித்துறை), நாகேந்திரராஜா ராஜமுகுந்தன் (கதிர்காம கோயிலடி, வதிரி, கரவெட்டி), ஆர்.தாரணி (15ஆம் மைல் கட்டை, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை), சங்கரப்பிள்ளை சசிகலாதேவி (செம்பியன்பற்று தெற்கு, தாளையடி). (ஐ-117-118)

# அமைச்சர் ஜெயராஜையும் ஜயலத்தையும் கைதுசெய்யக் கோருகிறது 'சிஹல உறுமய'

கொழும்பு,ஓக.18

தடைசெய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தினருடன் யார் தொடர் கொண்டாலும் அது சட்டவிரோதமான நடவடிக்கையாகும். எனவே, அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன ஆகியோரைக் கைது செய்து சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும்.

சிஹல உறுமயவின் பொதுச் செயலாளர் திலக் கருணாரட்ன இவ்வாறு அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

ஐ.தே.கட்சி உறுப்பினர் ஒருவர் அடிக்கடி கட்டுப்பாடற்ற பகுதிக்குச் சென்று புலி உறுப்பினர்களைச் சந்தித்து வருவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள சந்தர்ப்பத்திலே முதல் முறையாக அமைச்சர் ஒருவர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்று திரும்பியிருப்பது கண்டிக்கத்தக்க செயலாகும்.

இலங்கையின் விமானப் படைத்தளம் தாக்கி அழிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் ஒருவர் அங்கு சென்றுள்ளார். அமைச்சர்களை இலக்கு வைத்துத் தாக்கும் தற்கொலைப் படையணிகள் கொழும்புக்கு வரும் நிலையில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே புலிகள் இயக்கத்தின் பாதுகாப்போடு சென்றது வியப்புக்குரியது.

இவற்றைக் கொண்டு பார்க்கும் போது அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே புலிகள் இயக்கத்தின் நிழலாகச் செயற்படுவது தெரிகிறது. இந்நாட்டில் பல லட்சக்கணக்கான சிங்கள கத்தோலிக்க மக்களுக்குத் தரிசிக்க முடியாத மடுமாதாவை இவர்கள் மட்டும் எப்படித் தரிசிக்கிறார்கள்? இதனைக் கத்தோலிக்க மதகுருமாரும் ஆயர்களும் யோசிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## வடலியடைப்பு சித்தி விநாயகர் ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம்,ஓக.18

வடலியடைப்பிலுள்ள வரலாற்றுப் புகழ் மிக்க புதராணை ஶ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 22ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

திருவிழாக் காலத்தில் ஆலயச் சூழலுக்கு மின் வழங்கவென 5 கிலோ வாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய ஜெனறேற்றர் ஒன்றைத் தந்துதவுவதாக இலங்கை மின்சார சபையின் பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் எஸ்.வேலுப்பிள்ளை உறுதி அளித்துள்ளதாக வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் தெரிவித்தார்.

திருவிழாக் காலம் முடிவடைவதற்கு முன் வடலியடைப்புப் பகுதிக்கு நிரந்தர மின் இணைப்புகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ம)

கடற்படைப் படகினால் மோதுண்ட பின்

## காணாமற்போன மீனவர் திருமலையில் நலமே உள்ளார்

தென்மராட்சி,ஓக.18

வடமராட்சிக் கடலில் கடந்த மாதம் 27ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற வேளை கடற்படையினரின் விசைப்படகு மோதியதில் காணாமற்போன மீனவரான அந்தோனிப்பிள்ளை அருள் பெர்னாண்டோ (வயது30) தற்சமயம் திருகோணமலையில் உள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

வள்ளத்தில் சென்ற சமயம் கடற்படையினரின் விசைப்படகில் மோதுண்டு கடலில் வீசப்பட்டுத் தத்தளித்த இவரை, கடற்படையின் மற்றொரு றோறாப் படகில் வந்தவர்கள் காப்பாற்றி திருகோணமலையில் உள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதித்ததாகவும்-

அங்கு சிகிச்சை பெற்ற அவர் தேறியுள்ளதாகவும் -

அவரது குடும்பத்துக்கு நேற்று முன்தினம் தகவல் அனுப்பப்பட்டுள்ளது. (உ-3-117)

## சிறுவர் மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி,ஓக.18

இலங்கை சைவ மன்றங்களின் ஆதரவுடன் பருத்தித்துறை ஆத்தியடி முன்பள்ளி சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் கலந்துகொள்வார்.(ஐ-31-117)

## அதிபர்கள் கலந்துரையாடல்

பருத்தித்துறை,ஓக.18

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா தலைமையில் நடைபெறவுள்ளது. மாகாணக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-118)



தென்மராட்சி நுணாவிற்குளம் கண்ணகையம்மன் ஆலயம் கடந்த யுத்த அனர்த்தங்களால் பலத்த சேதம் அடைந்துள்ளது. சேதமடைந்துள்ள ஆலயத்தின் தோற்றத்தைப் படத்தில் காணலாம். (ஐ-27)

# அகமகிழ்ந்து நன்றி கூறுகின்றோம்



மாண்புமிகு அமைச்சர்

**K.N.டக்ளஸ் தேவானந்தா**

அவர்கள் ஜம்போறிக் குழுவினருக்கு 100 ஆயிரம் பெறுமதியான பான்ட்வாத்தியக் கருவிகளும் மற்றைய செலவுகளுக்கு 200 ஆயிரமும் போக வர கப்பல் செலவுக்கு 180 ஆயிரமும் தந்துதவினார். காலியில் நாங்கள் நிமிர்ந்து நின்றோம் என்றால் அது மிகையாகாது. பாரி முல்லைக்கு தேரை வழங்கினார் என்று சொன்னாலும் இவரது தாராள நெஞ்சத்தை தமிழ் நெஞ்சங்கள் மறக்கவும் முடியுமா? *18600 புள்ளிகளைப் பெற்று யாழ்ப்பாணம் சிறந்த மாவட்டமாகத் தெரிவு செய்யப்பட்டமைக்கு* கௌரவ அமைச்சர் ஆங்காங்கே வழங்கிய ஆதரவு, ஆலோசனை, பாதுகாப்பே காரணமாகும். நாம் அவரைப் பாராட்டுகின்றோம். நன்றி கூறுகின்றோம்.

ஜம்பூரிக் குழுவினர் 2001,
பெற்றோர் குழுமச் சபை,
யாழ். மத்திய மாவட்டம்.

க.அருந்தவராஜா
*மாவட்ட ஆணையாளர்,*

(91300)



# பாராட்டி நன்றி கூறுகின்றோம்

வல்லியானந்தம் சனசமூக நிலைய
புதிய கட்டடம் அமைப்பதற்காக நிதி உதவி
வழங்கிய -



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு.
புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு
தமிழ் விவகாரங்கள், இந்துசமய, கலாசார
மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்,
ஈ.பி.டி.பியின்
யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளருமாகிய
கௌரவ
**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களுக்கும்



பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவரும்,
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
வடமராட்சி அமைப்பாளருமாகிய
உயர்திரு.
**ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் (J.P.U.M.)**
(ரங்கன்) அவர்களுக்கும்

*எமது சனசமூக நிலையம் அமைப்பதற்கு அக்கறை கொண்டு நிதி வழங்கியமைக்காக பாராட்டி வாழ்த்துக்கூறி எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.*

சனசமூக நிலையத்தினர்,
வல்லியானந்தம் ச.ச.நிலையம்,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(91299)


## உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்க கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள்

**25-08-2001**

வடக்கு-கிழக்கு மாகாண நிர்வாக எல்லையுள் இயங்கும் ப.நோ.கூ.சங்கங்களின் துணைவிதி 23 இன் கீழ் வட-கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளருக்குறித்தாக்கப்பட்டும், இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 19-05-98ஆம் திகதிய 1028/6 இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்ட விதிகளுக்கு அமைய கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் எதிர்வரும் 25-08-2001ஆம் திகதி நடைபெறும்.

கிளைப் பொதுச்சபைக் கூட்டத்துக்கு சமூகமளிந்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் ஏற்கனவே அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. சங்கத்தின் சகல கிளைகளிலும் பொது இடங்களிலும் பொது அறிவித்தல்களும் வழங்கப்பட்டுள்ளன. மேலதிக விவரங்களுக்கு இவற்றைப் பார்வையிடவும்.

கிளைப் பொதுச் சபைக் கூட்டங்களில் சமூகமளித்து வாக்களிக்க உரித்துடைய உறுப்பினர்களை குறித்த அறிவிப்புகளின்படி சமூகமளித்து தங்கள் ஜனநாயக உரிமைகளை நடைமுறைப்படுத்தி கூட்டுறவு இயக்கத்தினை ஜனநாயக ஆளுமை கொண்டதாக செயற்படுத்துமாறும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**செ.கு.சண்முகநாதன்,**
*கூ.உ.ஆணையாளர்,*
*யாழ்ப்பாணம்.*

(C-7907)

## கட்புல காட்சி மண்டபம்

வடமராட்சி,ஓக.18

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 90 ஆயிரம் ரூபா செலவில் கட்புல, செவிப்புல காட்சி மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதியை கல்வித் திணைக்களம் ஒதுக்கீடு செய்துள்ளது. (ஐ-173)

## சந்நிதி ஆச்சிரமத்தில் தெய்வீக நிகழ்வுகள்

பிரசித்திபெற்ற தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவ காலமான நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையான 13 தினங்கள் வரை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் தினமும் முற்பகல் 10 மணிக்கு தெய்வீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வு வரிசையில்நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்ற தினத்தன்று வடபிராந்திய சாயி சமித்தி சாயி அன்பர்களின் பஜனையும், தொடர்ந்து 'கூறும் அடியார்கள் வினை தீர்த்த முகம்' என்ற தலைப்பில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனின் சொற்பொழிவும் இடம்பெறும். (ஐ-173)

## ஆசிரியர் செயலமர்வு

வடமராட்சி,ஓக.18

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் 9ஆம், 10ஆம் தரங்களில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் செயலமர்வும் எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரிய பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கு செயலமர்வில் 'இலக்கணம் கற்பித்தலும் ஆக்கத்திறன் வளர்த்தலும்' குறித்து விளக்கமளிக்கப்படும். குறிப்பிட்ட தரங்களில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் அத்தரங்களுக்குரிய தமிழ் பாட நூல்களுடன் சமூகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா கேட்டுள்ளார். (ஐ-173)

## ஆலயத்தில் புனரமைப்புப் பணி

வடமராட்சி,ஓக.18

இந்திய அமைதிப்படைக் காலத்திலும் பின்னரும் இடம்பெற்ற வன்செயல்களினால் முற்றாகச் சேதமடைந்த துன்னாலை புளியங்கியான் விநாயகர் ஆலயம் 50 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

ஆலயத்தின் மூலஸ்தானம், கர்ப்பக்கிரகம், மகாமண்டபம், அலங்கார மண்டபம், ஆறுதல்மண்டபம், தரிசன மண்டபம், கோபுர அடித்தளம் ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

முருகன், நவக்கிரக வைரவர் ஆலயங்கள், மணிக்கூட்டுக் கோபுரம், எழுந்தருளி மண்டபம், மடப்பள்ளி ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

புனரமைப்புக்கான நிதியில் ஒரு பகுதி வெளிநாடுகளில் வாழும் துன்னாலை வாசிகளால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி மற்றும் இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் 5 லட்சம் ரூபாவை இப்புனரமைப்புக்கு ஒதுக்கீடு செய்துள்ளார். (ஐ-173)

## இலவச கண் பரிசோதனை

வடமராட்சி,ஓக.18:

பருத்தித்துறை வர்த்தகர் சங்கமும், வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை, மாவட்ட வைத்தியசாலையும் இணைந்து நடத்தும் பருத்தித்துறை நகர மக்களுக்கான இலவச கண்பரிசோதனை முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை வர்த்தகர் சங்க அலுவலகத்தில் நடைபெறும்.

இப்பரிசோதனை முகாமின் போது 40 வயதுக்கு மேற்பட்ட 200 பேர்களுக்கு மட்டும் பரிசோதனை மேற்கொள்ளப்படும். கொழும்பில் இருந்து கண்ணாடிகள் கிடைத்ததும் இவர்களுக்கு கண்ணாடிகளும் இலவசமாக வழங்கப்படும்.

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி தனது தாயார் 'வைரமாளிகை' இளையாச்சி, மாமனார் பொறியியலாளர் மாணிக்கம் ஆகியோரின் ஞாபகார்த்தமாக இலவச கண் பரிசோதனை முகாம், இலவச கண்ணாடிகள் வழங்குதல் ஆகியவற்றுக்கு உதவிகளை வழங்கவுள்ளார். (ஐ-173)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்



(இன்று இருபத்தைந்தாம் திருவிழா - தீர்த்தம்)

## பார்க்கும் விழிகளுக்குப் பசுமைதந்து தீர்த்தமாடு!

*தீர்த்தமாடு தீமைவிலகிட நாளும் தீர்த்தமாடு!*
*தீங்குவளை மலர்பூக்கும் கேணிதனில் தீர்த்தமாடு!*
*ஆர்த்தெழுந்த அல்லல்கள் அகன்றொழியத் தீர்த்தமாடு!*
*அச்சமது இச்சமயந்தொட்டு அஞ்சியோடத் தீர்த்தமாடு!*
*பார்த்து நிற்கும் விழிகளுக்கு பசுமைதந்து தீர்த்தமாடு!*
*பக்தரது பதைபதைப்பை பறித்தெடுத்துத் தீர்த்தமாடு!*
*மூர்த்தியுந்தன் திருத்தலத்தில் மூர்க்கமறத் தீர்த்தமாடு!*
*முளைகொண்டு நல்வாழ்வு மலரட்டும் தீர்த்தமாடு!*

**ந.வேந்தன்,**
மானிப்பாய்.

## தீர்வொன்று தாஐயா!

ஈர்பத்துச் சகஆறு தினங்கள் நோன்பின்
இறுதிக்கு முதல்நாளில் தீர்த்தம் ஆடி
இதயத்து நோவொன்றும் தீர்ந்தோம் அல்லோம்
எழில் வேலா, உமைபாலா அன்பர் சீலா
போர் பற்றி இருக்கிறதே, தமிழர் வாழ்வு
புண்பட்டுக் கிடக்கிறதே அந்தோ அந்தோ
பூச்நகரில் ஏற்பட்ட பூகம் பம்போல்
பொன்விளைந்த வடபகுதி மண்ணாய்ப் போச்சு
ஊர்பற்றி எரிகிறதே கூடவேஎம்
உளம்பற்றி எரிகிறதே இலையோ மீட்சி?
உனைப்பற்றும் எமக்கிங்கே உலைச்சல் என்றால்
ஊரார்கள் உரைப்பதென்ன உன்னைப் பற்றி?
சீர்பற்றி இருந்ததெல்லாம் தீயில் பற்ற
தெருப்பற்றி இருக்கின்றோம், சிரட்டை பற்றி!
தீர்வொன்று தாஐயா நல்லூர்க் கந்தா
செந்தமிழர் எல்லோரும் சிறந்தே வாழ!

**- வ.சின்னப்பா,**
குணங்கிளப்பு.

## *தீர்த்தத்தில் வரமளிப்பான்!*

**தீர்த்த விழாவன்று திருக்கேணியாம் நல்லூரில்**
**ஆர்ப்பரித்து மூழ்கும் அடியார்க்கு - தீர்த்தத்தாற்**
**பாவங்கள் போகும் பணிந்தாடிக் கொண்டாட**
**ஆவலந் தீரும் அவனருளால் எங்களுக்கு.**

**அஞ்சிப் பயந்து அகதிகளாய் ஓடாமல்**
**கெஞ்சுகிறோம் கண்கண்ட தெய்வமுனைத்**
**தஞ்சமனி கடவுக்கு கந்தா நல் லூரானே!**
**ஆக்கமருள் உன்னருளால் அச்சமகற்று எங்களுக்கு.**

**- கு.கோபிலன்.**

## நல்ல தீர்வைத் தந்துவிடு!

தீர்த்தமாடி வரும் நல்லைக்கந்தா - எங்கள்
மனதில் இடம்பிடித்த வீரமறவா!
சீர் பெற்று வாழ்ந்த உன் மக்கள்
சீரழிந்து வாழ்வதுனக்கு விருப்பமோ? -- நீ
பார்த்திருக்க எத்தனை எத்தனை இன்னல்கள்
இம்மண்ணில் நடந்தேறுது - உனக்கு
நேர்த்தி வைத்து ஊர்கூடித் தொழுகின்றோம் - நல்ல
தீர்வைத் தந்துவிடு இம்மண்ணில்

**- மா.புவனேஸ்வரி.**

## *மூச்சிறப்பும் கண்டேன்*

**சீராரும் நடேசரே மூர்த்தி யென்றும்**
**சிறந்திடுநற் காசியே தலம தென்றும்**
**பேராரும் கங்கையே தீர்த்த மென்றும்**
**பேசுவார் உலகத்தோர் கந்தா நானோ**
**கூராரும் வேலினிலே மூர்த்தி கண்டேன்**
**குறைவில்லா நல்லூரில் தலத்தைக் கண்டேன்**
**ஏராரும் கேணியிலே தீர்த்தங் கண்டேன்**
**இம்மூன்றும் சிறப்புறவிங் கொருங்கே கண்டேன்.**

மாதனையூர் கு.க.சிங்காரவேலு.

# இந்த வார இராசி பலன்

## 19-8-2001 – 25-8-2001

| | | | |
|---|---|---|---|
| | | சனி | வெ வி ரா |
| | இராசிச் சக்கரம் | | |
| | | | சூ▲ புத சந் |
| செ கே | | | |

யுத்ததுன்பத்தால் நொந்து போயுள்ள எமது மக்களுக்கு நல்லூரான் தீர்த்தபாடிவரும் இன்று குதூகலிப்பு ஏற்பட்டு அது நிரந்தரமாக எம்மை குளிர்விக்க அவரையே வேண்டி நிற்போமாக!

**மாற்றம்**

***19-08-2001 இல் மகம், சிங்கம் இராசியில் சந்திரன் நிற்கும்***

***★ 19-08-2001 இல் கடகத்தில் வெள்ளி மாறும் — 25-08-2001 இல் கன்னியில் புதன் மாறும்.***

ஆட்சிப்பீடத்துக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் புதிய அழுத்தங்கள் வரும். இந்தியா புதிய உதவிகள், செய்யும், கருத்துக்கள் சொல்லும். அரசியல்வாதிகள் பதற்றப்படவோ, கட்சிமாறவோ எத்தனிப்பர். புதிய கருத்துக்கள் மக்கள் மத்தியில் ஏற்படும். நெருக்கடிகள் அதிகரிக்கலாம். இந்தியாவில் - தீவிரவாதிகளின் கைஓங்கும். அழிவுகள் தொடரலாம். மேற்கு உலகம், மத்திய கிழக்கு நாடுகளுக்கு, பொருளாதார, யுத்த நெருக்கடிகளை உருவாக்கும். கிழக்குப் பிராந்திய நாடுகளிலும் அந்திலாந்திச் சமுத்திர வலய நாடுகளிலும் இயற்கையின் சீற்றம் ஏற்பட்டு அழிவுகள் நடக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

காரியனுகூலமும்—சந்தர்ப்பவசமும் உள்ள அதிர்ஷ்டசாலிகளைத்தான் இயற்கை தேடி அழைக்கும். தொழில் ஸ்தானத்தில் என்ன கவலை? காசு செலவு, கருத்து வேற்றுமை ஏற்படல், நண்பன் ஒருவரால் பயம், தவறிவிழல், காயங்கள், வயிற்றுநோ. வாய்வுத் தொல்லை என்பன

**மகாதேவா ஜோதிடம்**

கொடுக்கும். தொடர்கதைப் பேச்சால் துன்பங்கள்தொடர இடமுண்டு. நிர்வாகம், அரசியல், பாதுகாப்பு, வங்கி, பிரயாணம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:– திங்கள், புதன், வெள்ளி.

### இடபம்

தன்னைத் திருத்திப்படுத்த மனிதர்கள் பலவிதமான வேடிக்கை, விளையாட்டு, திருவிழா, சமயச் சடங்குகள் போன்ற காரியங்களைச் செய்கின்றார்கள். தொழில் ஸ்தானத்திலும் இதற்காகக் காசு கேட்டுப் பலர் தொல்லை கொடுப்பார்கள். எதிலும் மந்தச் செயற்பாடு, தூரத்துச்செய்தி வேதனைதரலாம். முதுகுவிறைப்பு, கை கால் பிடிப்பு, தொண்டை கரகரப்பு, ஈரல் வருத்தம் என்பன கொடுக்கும். போக்குவரத்துத்துறை, குருத்துறை, அழகு சாதனப் பொருள்கள் விற்பனை, செய்தித்துறை, அச்சு, பிறிண்டிங் துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:– திங்கள், புதன், வெள்ளி.

### மிதுனம்

வீதிகளில் விளையாடுவது வேடிக்கையானதல்ல அது சில விபரீதங்களை ஏற்படுத்தக் கூடியது. அதேபோன்று தொழில் ஸ்தானத்தில் விளையாடலாமா? அவசரப்பட வேண்டாம். குடும்பத்தினருக்காக பேச்சுக்கள் செய்வீர்கள். களவு போகலாம். தூரதேசச் செய்திகள் சிலருக்கு வரும். புதிய நண்பர்களால் நன்மையும் அயலவர்களால் தொல்லைகளும் கொடுக்கும் வாதம், விறைப்பு, தலைச் சுற்று நல், வாய்வுத் தொல்லைகள் என்பன கொடுக்கும். நகைத்துறை, செய்தித்துறை, குருத்துறை, அரசியல் துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் பலவித இலாபங்கள் அடைவார்கள்.

அதிர்ஷ்டநாள்கள்:– திங்கள், புதன்.

### கடகம்

இப்பொழுது நீங்கள் பெரியவர்களை மதிக்கவில்லையாயின் எப்பொழுதோ நீங்கள் பெரியவர்களாக வரும்போது அப்பொழுது வரும் சிறியவர்கள் உங்களை மதிக்க மாட்டார்கள். காசு வரவு ஏற்படும். சகோதர உதவிகள் கிடைக்கும். வாகன சுகம் உண்டு. எதிரிகளால் தொல்லைகள் ஏற்படும். வயிற்றில் வருத்தம், இரத்த அழுத்தம், உஷ்ண பீடைகள், வாய்வுத் தொல்லைகள் என்பன கொடுக்கலாம். பாதுகாப்புத்துறை, அரசியல் துறை, எண்ணெய்த்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்களுக்குபலநன்மைகள் கொடுக்கலாம்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:– திங்கள், புதன், வியாழன்

### சிங்கம்

உறுதியுடன் போராடினால் உண்மையில் உயர் பீடம் கிடைக்கும். சந்தர்ப்பம்வரும்பொழுதுபிரயோகித்துக்கொள்ளல் வேண்டும். நல்லவர்களுக்கு, நல்லவர்களே உதவியாக இருப்பார்கள். தொழில் ஸ்தானத்தில் கலகங்கள் வந்து நியாயங்கள் பிறக்கும். காலமாகும் வீடு, வாகனயோகம் உண்டு. மறைமுக எதிர்ப்புக்கள் உங்களை எதுவும் செய்துவிடமுடியாது. இடமாற்றங்கள், புதிய பொறுப்புக்கள் தேடிவரும் காலமாகும். புதிய நட்பு நன்மைகளைத்தரமாட்டாது. கவனமாக இருக்கவும். செய்தித்துறை, விவசாயத்துறை, நிர்வாகத்துறை, குருத்துறை, மருந்துத்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்கள்:– புதன், வியாழன்.

### கன்னி

மாறாதகவர்ச்சியால் — அன்பு பாசம் வருகின்றது. பிறவியுடன் ஒட்டிவரும் உறவால் பாசம் ஒரு தொடர்கதையாகித் தொடர்கின்றது. இதையெல்லாம் கண்டுங் காணாமல் இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் அமைதி கலகநாஸ்தி எனச் செயற்பாடுகள் இருக்கும். தடுமாற்றம் சிலவேளைஏற்படும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். உறவுமுறை பெருகிவரும் காலமாகும். சளித்தொல்லை, இடுப்புநோ, கிருமித்தாக்கம், மூலவருத்தம், வாய்வுரோகம் என்பன கொடுக்கும். கொடுக்கல் வாங்கலில் கலகம் வரலாம் கவனமாகப், பொறுமையாக இருக்கவும். இசைத்துறை. வங்கித்துறை, விவசாயத்துறை, மருந்துத்துறை குருத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்கள்:– புதன், வியாழன், வெள்ளி.

### துலாம்

எந்தக் கோணத்தில் இருந்து பார்த்தாலும் எதையும்பேசி தீர்ப்பதனால் பிரச்சனைகள் குறைகின்றது. தொழில் ஸ்தானத்தில் நன்மை, தீமைகலந்து நடக்கும். அடிக்கடி கோபம்வரும். சகோதரங்களிடமிருந்து செய்திகள் வரும். பிரயாணங்களால் கஷ்டங்கள் வரலாம். நிதானமாக இருக்கவும். புதிய பொருள்வரவும், புதிய பொறுப்புக்களும் வரும். வயிற்றுவருத்தம், சலவருத்தம், குடல், தோல்வருத்தங்கள் வரும். அரசியல்துறை. பாதுகாப்புத்துறை, சட்டத்துறை. மருந்து வியாபாரத்துறை போன்ற துறையினர் இலாபங்கள் அடைவார்கள். இடமாற்றங்களில் கவனமாக இருக்கவும்.

★ அதிர்ஷ்டநாள்கள்:– புதன், வியாழன், வெள்ளி.

### விருச்சிகம்

ஒவ்வொரு மனிதரிலும் மனிதத் தன்மையும்உண்டு. மிருகத்தன்மையும் உண்டு அதை நாம் புரிந்து செயற்படுவதிலிருந்து மாற்றங்கள் கிடைக்கின்றது. நன்மை, தீமை தெரிகின்றது. தொழில் ஸ்தானத்தில் சலிப்பு, மனச்சோர்வு ஏற்படும். அமைதியாக இருக்க முயலுங்கள். மறைமுக எதிர்ப்புக்கள் வர இடம் உண்டு. தூரதேசச் செய்திகள் வரும். கிருமித்தாக்கம், மூக்கு, தொண்டை வருத்தம், நரம்புச்சோர்வு நாரி உளைவு என்பன கொடுக்கும். போக்குவரத்துத்துறை, வியாபாரத்துறை, மருந்துத்துறை, சட்டத்துறைபோன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்கள்;– புதன், வியாழன், வெள்ளி.

### தனுசு

காலத்தில் பயிர் செய்வதனால் கனக்கப்பலன் கிடைக்கும். பாடுபடும் எவரும் பலன்கள் அனுபவிப்பார்கள். தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி கோபப்படுவீர்கள். புதிய பொறுப்புகள் வரும். வீடு, நிலம், வாகனசுகம் என்பன கிடைக்கும். சிலருக்கு புதிய நண்பர்களால் மாற்றங்கள் ஏற்படலாம். குடும்பத்தினரின் அலுவல்களில் ஈடுபடுவீர்கள். பிரயாணங்களைத் தவிர்க்கவும். அல்லது இழப்புக்கள் வரும். இடுப்பு வருத்தம், நரம்புப்பிடிப்பு, கைகால்நோ, வாய்வுத் தொல்லை, வயிற்று வருத்தங்கள் என்பன வர இடமுண்டு. வைத்தியம் சுகம் தரும். பிரயாணத்துறை சட்டத்துறை, குருத்துறை, நிர்வாகத்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:– திங்கள், புதன், வியாழன், வெள்ளி.

### மகரம்

மாறி வரும் உலகில் நாதியற்று நிற்பவர்கள் அநேகர்கள். விதியின் சதியால் பலவித விளைவுகள் ஏற்படுகின்றன நாம் விதைத்ததை யார் அறுப்பார்கள்? தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்புகளால் மனப்பேதலிப்பு வரும். இடமாற்றம் வரும் சூழ்நிலை வரலாம். வயிற்றுநோ. அஜீரணம், நரம்புச்சோர்வு, மனக்குழப்பம், தோல் வருத்தம் என்பன கொடுக்கும். போக்குவரத்தில் நிதானமாக இல்லாவிட்டால் விபத்துக்கள் வரலாம். குடும்பத்தினரின் அலுவல்கள் மனச்சங்கடத்தைத்தர இடமுண்டு. போக்குவரத்துத் துறை, விவசாயத்துறை, குருத்துறை, வங்கித்துறை போன்ற துறைகளில் தொடர்பானவர்கள் நன்மைகள் அடைவார்கள்.

அதிர்ஷ்ட நாள்கள்:– திங்கள், வியாழன், வெள்ளி.

### கும்பம்

உலகில் அடாத்துச் செய்து வாழச் சிலர் பழகிக் கொண்டார்கள். இவர்கள் நடிக்கிறார்களா? அல்லது தங்களைப் பலவீனப்படுத்துகிறார்களா? அறிந்தும் அறியாமலும் செய்யும் பிழைகளின் தொடருவதனால் விருத்திகள் வரமாட்டாது. தொழில் ஸ்தானத்தில் பெரியவர்கள் உதவுவார்கள். இடமாற்றங்கள் கொடுக்கும். தூரத்துச் செய்திகள் மனச்சஞ்சலத்தைக தரலாம். அடிக்கடி வரும் கோபத்தை நிதானப்படுத்தி வாருங்கள். மூட்டு வலி, கால்வருத்தங்கள், மறதி, தொண்டை வரட்சி என்பன கொடுக்கும். தேலில் கடி சிலருக்கு வரலாம். விவசாயத் துறை, பாதுகாப்புத்துறை, மருந்துத்துறை, வங்கித் துறை, குருத்துறை தொடர்பானவர்கள் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:– திங்கள், வியாழன்.


### மீனம்

பிச்சை வாங்கி மது அருந்திவிட்டுச் சண்டித்தனம் பேசும் பலரால் நல்லவர்கள் சிலர் வேதனைப்படுகிறார்கள். துன்பத்தை தூர விலக்கி விடுங்கள். தொழில் ஸ்தானங்களில் போட்டிகள் வந்து வேதனை தரும். மேலதிகாரிகள் உதவி செய்தாலும் குறை குற்றம் கேட்பீர்கள். தூரதேசச் செய்திகளால் பலவித நன்மை, தீமைகள் வரும். பொருள் களவு, கொடுக்கல் வாங்கலால் வேதனை வரும். வயிற்றில் வருத்தம், பித்தக் கொதிப்பு, நரம்பு வருத்தம், அடிக்கடி மறதி, வாய்வுத் தொல்லை என்பன ஏற்படும். பிரயாணத்துறை, மருந்துத் துறை, குருத்துறை விவசாயத்துறை போன்ற துறையினர்கள் மிகக் கவனமாக இருக்கவும். ஆனால் இலாபங்கள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:– திங்கள், வியாழன்.

---

## 11-ம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் வைத்திலிங்கம் நடராசா**

(தோலகட்டி வயாவிளான், முன்னாள் பொறுப்பதிகாரி, வலி. கிழக்கு, பிரதேச சபை, அச்சுவேலி)

மலர்வு: 18-06-1933    • உதிர்வு: 20-08-1990

திதி: 18 – 08 – 2001

**நெஞ்சம் மறக்குமா.....?**

எத்தனை ஆண்டுகள் மறைந்து போனாலும்
எங்கள் நெஞ்சம் உங்களை மறக்குமா?
நித்தம் உங்களின் நினைவுடன் வாழ்கிறோம்
நீங்கள் காட்டிய பாதையில் செல்கிறோம்
புத்தம் புதிய வாழ்வைச் சேர்க்கிறோம்
புகழுடன் பிள்ளைகள் நாங்கள் வாழ்கிறோம்
கந்தனின் தீர்த்தத் திருநாள் மலர்ந்திட
கருணையின் வடிவமே உங்களை வணங்குகிறோம்!

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 22, 4ஆம் ஒழுங்கை,
அரசடி றோட், கந்தர்மடம்.    (91244)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு

பகிறா இன தரம் (1) புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வி.குணபாகன், 343, கே.கே.எஸ். வீதி, OR 609, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P:3353.(91284)

### விற்பனைக்கு

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட புதிய EURO STAR டிஜிட்டல், அனலொக் றிசிவர், L.N.B.F. EURO STAR 8 அடி, 10 அடி டிஸ்க் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.2863-3327. (91273)

ஐஸ்கிறீம் பிளாண்டுகள், வுட்லண்ஸ்... பிரிஜ்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 42/6, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (91241)

### கைமாறிவிட்டது

கடந்த 06.08.2001 அன்று பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் வந்த [illegible] 4212 இலக்க மினிபஸ்ஸில் [illegible] மாறி கையளிக்கப்பட்ட ([illegible]கள்) துவிச்சக்கர வண்டியை ஏற்றுச் சென்ற நபர் உடன் வடமராட்சி சிற்றூர்தி சேவைக் காரியாலயத்தில் அதனைக் கையளித்துத் தங்க[illegible] [illegible]விச்சக்கர வண்டியைப் பெற்று[illegible] [illegible]ள்ளவும். (91287)

### ஸ்கூட்டர் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 500 - Select II ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவஞானம், பருத்தித்துறை வீதி, பூதர்மடம், கோப்பாய். (91297)

### தவறிவிட்டது

வட்டப்புலம் இளவாலையைச் சேர்ந்த கூலம்பிள்ளை வில்விறெட் இராச நாயகம் ஆகிய எனது தே.அ.அ. (இல.483361343V), விசேட அ.அ.(இல. 0905000261) என்பன பண்டத்தரிப்பிற்கும் இளவாலைக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஈசன் பல்பொருள் வாணிபம், இளவாலை எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (91295)

சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த அழகரத்தினம் பற்குணநாதன் என்பவரது விசேட அ.அ.(இல.091013446) நல்லூரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நெல்லியடியில் இயங்கும் சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (C/17895)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

இறைச்சிக்கோழி (புறொயிலர்) விற்பனைக்குண்டு. தொடர்பு: கி.கணேசன், உடுப்பிட்டி றோட், தொண்டமனாறு. (91218)

### பயிற்சி

கார் ஓட்ட பயிற்சியளிக்கப்படும். தொடர்பு: 200/1, 4ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.(91302)

## கூ.சங்கத்தின் உறுப்பினர்களுக்கு கடன் வசதி

தென்மராட்சி,ஓக.18

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் கடந்த ஆறு மாதங்களில் அங்கத்தவர்களுக்கு சங்கக் கிராமிய வங்கி ஊடாக 75 லட்சம் ரூபாவினைக் கடனாக வழங்கியுள்ளனர்.

சிறுகைத்தொழில், வீடமைப்புப் போன்றவற்றுக்கு ஆதன உறுதிகளைப் பொறுப்பேற்று கடன்களை வழங்கியுள்ளதாக சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தெரிவித்தார். (ஐ-117)


### மருந்தாளர்/ மருந்துக்கலவையாளர் தேவை

மருந்தகத்தில் கடமை புரிவதற்கு தகுதிபெற்ற மருந்தாளர்/ மருந்துக்கலவையாளர் உடன் தேவை.

ஜனனி மருந்தகம்
ஆனைக்கோட்டைச் சந்தி.

(91301)


## தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம்,ஓக.18

காங்கேசன்துறைக்கு நேற்று முன்தினம் வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 212 தபாற்பொதிகள் எடுத்துவரப்பட்டன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 75 தபாற்பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தபாற்றிணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-10)

## அவசர கலந்துரையாடல்

க.பொ.த. உயர்தர புள்ளிகளின் அடிப்படையில் தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கான 2000ஆம் ஆண்டில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி நியமனம் கிடைக்காதவர்களுக்கான கலந்துரையாடல் நடைபெற இருப்பதால் 19.08.2001 (ஞாயிறு) காலை 9.00 மணிக்கு புதிய உயர்கல்லூரிக்கு முன்பாக சகல அங்கத்தவர்களும் ஒன்று கூடவும்.

(91303) -செயலாளர்-

## உளங் கனிந்த நன்றியோடு பாராட்டி வாழ்த்துகின்றோம்

### அருள்மிகு முத்துக்குமார சுவாமி கோயில் வதிரிச்சந்தி, காரையந்தோட்டம்

எமது ஆலய வசந்தமண்டபம், யாகசாலை திருப்பணி வேலைகளுக்காக நிதி உதவி வழங்கிய, வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு – கிழக்கு தமிழ் விவகார இந்து சமய கலாசார அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான



மாண்புமிகு
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கௌரவ
**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களுக்கும்

கரவெட்டிப் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளர்
**திரு. ப.ரவீந்திரன் (ராசிக்)**
அவர்களுக்கும்,

கரவெட்டிப் பிரதேச சபை உபதலைவரான
**பி.அலென்ரன் கியூட் (உதயன்)**
அவர்களுக்கும்

எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பரிபாலனசபை
அருள்மிகு முத்துக்குமார சுவாமி கோயில்
வதிரிச்சந்தி, காரையந்தோட்டம்.

(C/17906)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் மயில்வாகனம் ஜெயக்குமார்

(கடாபி)

*(அ.இ.ச.நீதிவான், அமைப்பாளர் - ஸ்ரீ.ல.சு.கட்சி. உடுப்பிட்டித் தொகுதி பிரதேச சபை உறுப்பினர் - நெல்லியடி.)*

மலர்வு 19.02.1969 — உதிர்வு 05.07.2001

அன்னார் கடந்த 05.07.2001 வியாழக்கிழமை அகால மரணமடைந்ததையிட்டு ஆற்றொணாத் துயரடைகின்றோம். அன்னாரின் திடீர் மறைவால் பெருந்துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் மற்றும் நண்பர்களுக்கும் எமது கவலையையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். அத்துடன் அமரரின் ஆன்மா சாந்தி அடைய வேண்டுமென இன்றைய 45ஆம் நாளில் அவரை நினைவு கூர்ந்து ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஸ்ரீ.ல.சு.கட்சி,*
*யாழ்ப்பாணம்.* (C/17910)

-நிர்வாகம்.

## ஓராண்டு நிறைவு நினைவு தினம்



### திருமதி அ.பொன்னப்பா இராசம்மா

அவர்கள்

தோற்றம்: 12-06-1903 — மறைவு: 29-08-2000

*அன்புப் பெருமக்களே!*

எப்பொருளையும் நாம் திரும்பத் திரும்ப எவ்வளவும் பெறலாம். ஆனால்....

அன்னை - தந்தையரை ஒரு முறைதான் எமது வாழ்வில் பெறலாம்! காணலாம்!! அதிலும் "அன்னையை" ஏன் முன்னதாக வைத்துக் கூற்றுகளில் பாடப்படுவதெனில் அவர்கள் எம்மை அவரது வயிற்றில் உருவாக்கிய காலந்தொட்டே அவர்கள் எங்களால் தாங்கொணாத் துன்பங்களுக்கு இடர்படுகின்றனர். அதனை முன்வைத்தே அவர்களுக்கு முதலிடம் கொடுத்து "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வ"மென ஆன்றோர்கள் கூறியுள்ளார்கள். இந்த வகையில் எங்கள் அன்னை பற்றி நோக்கில்; எமது தந்தையார் அ.பொன்னப்பா அவர்கள் ஒரு சிறிய குடும்பத்தைச் சார்ந்தவர். அவர் அவரது பிள்ளைகளாகிய எங்களை அவரது வாழ்வமைப்புக்கு ஏற்றவாறு வாழ்வமைப்பில் திறமையாக செயல்படுத்தி வாழ வைத்தவர். அவரைப்பற்றி எமக்குச் செய்த திறனமைப்பை எடுத்துக் கூறுவதற்கில்லை. அவ்வளவு பெருமை எம்மிடத்து. நிற்க அவர் 1945ஆம் ஆண்டு எமது குடும்ப அமைப்பில் இருந்து இறைவனடி சென்றுவிட்டார். அப்போ அவரது குழந்தைகளாகிய நாமெல்லாம் பயமறியா சிறுவர்களாக இருந்தோம். ஆனால் எங்கள் அன்னை எம்மையெல்லாம் வறுமை வாழ்விலும், மற்றோர்களுக்குச் சிரமம் கொடாது "ஒரு வேளை தானுண்டு பலவேளை எமக்களித்த அன்புத் தெய்வம் அவரை நாம் உயிருள்ளவரை மறப்பதற்கில்லை! அதைவிட அவர்களுக்கு ஏற்ற லக்ஷ்மி கடாட்சம் பெற்ற மருமக்களையும் அவரவர் பருவகாலத்தில் தேர்ந்தெடுத்து வாழ்வமைப்புவித்து தந்த பெருமையையும் எமது குடும்பத்தினர்கள் என்றென்றும் மறப்பதற்கில்லை.

**எங்கள் குடும்பத்தின் திருவிளக்கே எங்கள் அம்மா......!**
**நல்லைக் கந்தனின் திருவருளைப் பெற்று அவரது**
**திருவிழாக் காலத்தில்;**
**நல்லைக்கந்தன் திருவடி சேர்ந்தவர்களே எங்கள்**
**அம்மா.....!**
**ஆண்டொன்று போனாலும் உமது அன்பு முகம்**
**மறப்போமோ அம்மா...!**
**தாயிற் சிறந்த கோயில் எங்கள் அம்மா.....!**

எங்கள் அன்னையின் ஓராண்டு நிறைவை இன்று (18.08.2001) சனிக்கிழமை நிறைவுபடுத்த நல்லைக் கந்தன் திருவருள் பெற்று பிள்ளைகளாகிய நாங்கள் சிரார்த்த தினத்தை நடத்த எம்பெருமான் கருணை கூர்ந்துள்ளார். ஆகவே தாங்கள் எங்கள் அன்னையின் சாந்தி நிகழ்வுகளிலும் மற்றும் நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புரிமை தழுவி அழைக்கின்றோம்.

பிள்ளைகள்: **பொ.சுப்பிரமணியம் குடும்பம்,**
**பொ.காசிப்பிள்ளை குடும்பம்,**
**திரு.திருமதி இ.இராசேந்திரமும்,**
உறவினர்களும்.

*4,செட்டித்தெரு,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

(C/17908)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 19 - 06 - 1934

மறைவு 19 - 07 - 2001

## அந்தோனி யோசேப்பு

எம் பாசத்தின் உறைவிடமே - ஐயா!
எமை நீங்கள் ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டுச் சென்ற ஒரு மாதம்
ஓர் நிமிஷம் போல் கழிந்துவிட்டன....ஐயா,
நீங்கள் எங்களோடு இல்லை என்ற உண்மை
இன்னமும் முழுதாய் ஜீரணமாகவில்லை
நீங்கள் எம்மோடு வாழ்ந்த
பிரியம் நிறைந்த நினைவுகளோடு
உங்களை அஞ்சலிக்கின்றோம்.

உங்கள் ஆன்மா இறைவனில்
இளைப்பாறப் பிரார்த்திக்கின்றோம்.

*இளவாலை மேற்கு,*
*இளவாலை.*

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,மருமக்கள்,
பேர்த்திமார், உற்றார், உறவினர்கள்.

(C/17916)

---

கொக்குவில் கிழக்கு

## பொற்பதி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம்

மேற்படி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 22.08.2001 புதன்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 02.09.2001 ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவுபெறும்.

பிரதிஷ்டா பிரதமகுரு **பிரம்மஸ்ரீ சி.சிவசுப்பிரமணியக் குருக்கள்**
(கதிர் வேலாயுத சுவாமி தேவஸ்தானம், சுழிபுரம்)

குறிப்பு:- தற்பொழுது ஆலயத்தில் சுற்றுப் பிரகார மண்டபத் திருப்பணி வேலைகள் நடைபெறுவதால் நிதி உதவி, பொருள் உதவி செய்ய விரும்புவோர் ஆலய நிர்வாகஸ்தரிடம் நிதியைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

தியாகராஜக் குருக்கள் நடராஜசர்மா,
ஆலய நிர்வாகஸ்தரும், பரிபாலகரும்.

(91312)

---

## ஆசிரிய ஆலோசகர்களுக்கு

பருத்தித்துறை,ஓக.18

வடமராட்சி கல்வி வலயத்தின் சகல பாட ஆசிரிய சேவைக்கால ஆலோசகர்களையும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வலயக் கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா அறிவித்துள்ளார்.

(ஐ-118)

## தொடர்பு கொள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.18

கீழே பெயர் குறிப்பிடப்படுபவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

☆ ஜோசப் அருளானந்தம், அருளானந்தம் சாரதா, அருளானந்தம் ஜெபதர்ஷினி (டச்சு வீதி, உடுவில்)

☆ செல்லத்தம்பி சிவகுமார், சிவகுமார் சீதா, சிவகுமார் மீனா (ஆஸ்பத்திரியடி, இணுவில் மேற்கு)

☆ முத்து பூமிநாதன், பூமிநாதன் சரோஜா, (17/4, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை).

(ஐ)

---


**நாகம்ஸ்** கன்னாகம்

வேணு, ரோஜா (இரட்டை வேடம்) நடித்த

**பொட்டு அம்மன்**

(ரீல்ஸ்)

பேய்களின் அட்டகாசம் நிறைந்த படம்

காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)

(91305)



**ராஜா** யாழ்ப்பாணம்

இளைய தளபதி விஜய், தேவயானி, சூர்யா, நடிப்பில

**ப்ரண்ட்ஸ்**

தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)

22-08-2001 முதல்
*முதலமைச்சர் ஜெயந்தி*

(C/17875)


---

# நன்றியுடன் பாராட்டுகின்றோம்

## சமரபாகு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய

*புனரமைப்பு வேலைகளை ஆரம்பிப்பதற்க ஒரு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்து உதவிய*



மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்

யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர்
**திரு.கா.வே.குகேந்திரன் (நா.உ.)**
அவர்களையும்



வல்வெட்டித்துறை பிரதம அமைப்பாளர்
**திரு.யோகா**
அவர்களையும்

எமது ஆலய பரிபாலன சபையினர் சார்பில்
நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*சமரபாகு.* (91308)

ஆலய பரிபாலன சபை,
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்.

---

# பாராட்டி நன்றியுடன் வாழ்த்துகின்றோம்

நெடுந்தீவு - புனித யுவானியார் ஆலய
புனரமைப்புக்காக மூன்று லட்சம் ரூபா நிதியை ஒதுக்கி
அதில் ஒன்றரை லட்சம் ரூபா நிதியை
உடன் வழங்கி உதவியமைக்காக



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார இந்து கலாசார அமைச்சரும் ஈ.ம.ஜ.கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்,
ஈ.பி.டி.பி.
யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளருமான
**திரு.கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களுக்கும்





முன்னாள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்,
ஈ.பி.டி.பியின் தீவக அமைப்பாளரும்,
ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவருமான
**திரு.ந.மதனராஜா (மனோ)**
அவர்களுக்கும்

நெடுந்தீவுப் பொறுப்பாளர்
**திரு.கே.நவநீதன்**
**(தோழர் மோகன்)**
அவர்களுக்கும்



நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர்
**புலவர் A.W.அரியநாயகம்**
J.P.U.M.
அவர்களுக்கும்

எமது ஆலய மக்கள், நிர்வாகிகள் சார்பில்
உளங்கனிந்த நன்றியைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

புனித யுவானியார் ஆலயம்,
நெடுந்தீவு.

(91307)

பங்குத் தந்தை,
நிர்வாகிகள்,
ஆலய மக்கள்.

---

# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வித் திணைக்களம்

இதன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளரும், யாழ். வலயக் கல்வித் திணைக்கள கேள்விச் சபைத் தலைவருமாகிய என்னால் 2001.09.05 ஆம் திகதி மு.ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே மு.ப. 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| இல. | பாடசாலைப் பெயரும் விலாசமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. | யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாடிக்கட்டடம் 50' - 0' - 25' - 0' (கீழ்மாடி மட்டும்) | 500.00 | 5000.00 |
| 02. | யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி. மாடிக்கட்டடம் 50' - 0' 25' - 0' (கீழ்மாடி மட்டும்) | 500.00 | 4000.00 |

01. மேற்படி திருத்த வேலைகளுக்கு இக்ராட் (ஐசீரீஏடி) நிறுவனத்தின் தரம் எம்.09உம் அதற்கு மேற்பட்ட தரத்திற்குப் பதிவு செய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.
02. கேள்விப்பத்திரங்களின் பொருள்கள் சேவை வரி (ஜி.எஸ்.ரி) சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை, பொருள்கள் சேவை வரி (ஜி.எஸ்.ரி) சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
03. வேலைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட கேள்விப் பணத்தை யாழ்ப்பாண வலயக் கல்வித் திணைக்களத்தில் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து கேள்விப்பத்திரங்களை 2001.08.20 ஆம் திகதியிலிருந்து 2001.08.27 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை யாழ்.வலயக் கல்வித் திணைக்களப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
04. கேள்விப்பத்திரங்கள் யாவும் இரு பிரதிகளிற் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியுடன் எம்மால் வழங்கப்படும் "ஒப்பந்த நிபந்தனைப் படிவமும்" கையொப்பம்,இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப் பத்திர இணைப் பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இடப்பட்டு கடித உறைகளில் இடது மேற்பக்கத்தில் வேலையின் விவரமும் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிற் போட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு **தலைவர், கேள்விச்சபை, வலயக் கல்வி அலுவலகம், செம்மணி வீதி, யாழ்ப்பாணம்** என விலாசமிடப்பட்டு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரின் அலுவலக அறையினுள் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் 2001.09.05 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் இடப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
05. மேலும் பொருள்கள் சேவை வரிக்கான (ஜி.எஸ்.ரி) பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரருக்கு கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.
06. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து 03 மாத காலத்திற்குள் வேலையைப் பூர்த்தி செய்து கையளித்தல் வேண்டும். எதுவித காலதாமதங்களும் காரணங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆவணங்கள் சரியாக இணைக்கப்படாத,சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய, தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
07. கேள்வி ஆவணங்கள் இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலைக் கட்டட வேலைகள் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என அறியத்தருகின்றோம்.

*பாடசாலைக் கட்டட வேலைகள் கிளை,*
*வலயக் கல்வித் திணைக்களம்,*
*செம்மணி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

திருமதி செ.மகாலிங்கம்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(C/17912)

---

# மரண அறிவித்தல்

## திருமதி இராசம்மா நடராசா

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராசம்மா நடராசா நேற்று (17.08.2001) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செ.நடராசாவின் அன்பு மனைவியும் கனகநாயகம் (நில அளவையாளர், ஜேர்மனி), ஞானேஸ்வரி (ஜேர்மனி), இரத்தினம்மா (நெசவு போதனா ஆசிரியை, உடுவில்), வசந்தகுமாரி (அரசினர் வைத்தியசாலை, முழங்காவில்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கலாநிதி (ஜேர்மனி), லோகநாதன் (ஜேர்மனி), இராசசந்திரன் (முழங்காவில்) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரவினா, அபிராமி, ஆதித்தன், ரெஜினா, வாகீசன், லீகசன் (ஜேர்மனி), பிரம்மராஷ், ஹம்ஸா (முழங்காவில்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற கனகரத்தினம் (நீர்வேலி), திருமதி நாகரத்தினம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2001) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கோண்டாவில் மேற்கில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மடத்தடி ஒழுங்கை,*
*கோண்டாவில் மேற்கு.*

தகவல்:
செல்வி இரத்தினம்மா நடராசா.

(C/17915)

காணாமற்போன படையினரின் ... ாரம்:

# தமிழ்ச்செல்வனுடன் பேசியவற்றை சந்திரிகாவுக்கு விளக்க முயற்சி

கொழும்பு,ஒக.18

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் காணாமற்போன படையினரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தினர் நடத்திய பேச்சுக்களின் விவரத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு விளக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை மடுவுக்கு விஜயம் மேற்கொண்ட காணாமற்போன படையினரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தைச் சேர்ந்த - பத்துப்பேர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசியிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் தமிழ்ச்செல்வன் கூறிய விடயங்கள் குறித்துப் பேசுவதற்காக ஜனாதிபதியைச் சந்திப்பதற்குத் தாங்கள் முயற்சி செய்து வருவதாக காணாமற்போன படையினரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத் தலைவர் நாணயக்கார தெரிவித்துள்ளார். (க-4)

## இலுப்பை மரத்தில் ஏறியவர் விழுந்து உயிரிழப்பு

மரத்தில் ஏறி, இலுப்பைக்காய் பிடுங்கிக் கொண்டிருந்தவேளை தவறிவிழுந்து ஒருவர் உயிரிழந்தார்.

அராலியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் தாவடி தெற்கில் வசிப்பவரான சின்னையா குணரட்ணம் (வயது 50) என்பவரே மரணமானார். (... 15)

## வங்காலையில் கரை ஒதுங்கிய சடலம்

மன்னார் நகரில் இருந்து பத்துக் கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வங்காலையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் ஆண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளது என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

அடையாளம் காண்பதற்காகவும், மேலதிக விசாரணைக்காகவும் இந்தச சடலம் மன்னார் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (க-3)

## உதைபந்தாட்டம்

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 4.15 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

- பி.ப.4.15 - சென்றோக்ஸ் வி.க. எதிர் அரியாலை வி.க.
- பி.ப. 5.15 - பாஷையூர் சென். அன்ரனீஸ் வி.க. எதிர் யாழ்.பல்கலைக்கழகம் (ஐ-51)

☆ ☆ ☆

வலிகாமம் உதைபந்தாட்ட லீக் கழகத்தின் அனுசரணையுடன் நவாலி நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நாமகள் மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் ஏழாலை ஸ்ரீமுருகன் வி.கவும் மானிப்பாய் றெட் றேஞ்சர் வி.கவும் மோதும்.

## நல்லூர் கந்தனை தரிசிக்க வந்தவர் வழியில் மரணம்

யாழ்ப்பாணம்,ஒக.18

நல்லூரில் முருகன் தேரில் பவனிவரும் அருங்காட்சியைக் காண வந்த பக்தர் ஒருவர் இடை வழியில் மரணமானார்.

இணுவிலில் இருந்து மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் நல்லூருக்கு வந்துகொண்டிருந்த சமயம் வழியில் மோட்டார் சைக்கிளில் ஏற்பட்ட பிழையைத் திருத்த முற்பட்ட வேளை அவர் திடீரென மயங்கி விழுந்து அவ்விடத்திலேயே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இணுவில் தெற்கைச் சேர்ந்த எஸ்.இராசரத்தினம் (வயது 50) என்பவரே மரணமானவராவார்.

யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட இவரது சடலம், மரண விசாரணையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (க-15)

## இரசாயன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புச் செய்தியாளர், இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்னவிடம் கேள்வி எழுப்பியபோது -

"இந்த ஆயுதங்களை வாங்குவது வேறு; பயன்படுத்துவது வேறு" என்று குறிப்பிட்டதன் மூலமும் -

பல நாடுகள் "அணு ஆயுதங்கள் மற்றும் இரசாயன ஆயுதங்களை வைத்திருக்கின்ற போதிலும் அதனைப் பயன்படுத்துவதில்லை" என்று தெரிவித்து இந்த ஆயுதக் கொள்வனவை நியாயப்படுத்தியதன் மூலமும் -

இக்கொள்வனவை உறுதிப்படுத்தினார்.

ஆனால் அவை தடை செய்யப்படாத - தரைப்படை றொக்கட்டுக்கள் - சுவாலை எறிகணைகள் - என்று அரசு இப்போது விளக்கம் தெரிவித்துள்ளது.

அவை இரசாயன ஆயுதங்கள் அல்ல என்றும் அரசுத் தரப்பில் விளக்கமளிக்கப்பட்டிருக்கின்றது.

"இது முற்றிலும் உண்மை அல்லாத - பொய்க்குற்றச்சாட்டு" என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன இப்போது தெரிவித்துள்ளார்.

இத்தகைய பொய்ச் செய்திகளைப் பரப்புவதன் மூலம் புலிகளுக்கு உதவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என்று வெகுஜனத் தொடர்பு சாதனங்களைக் கோரியுள்ள அரசு "இந்த மாதிரிப் பொறுப்பற்ற முறையில் செயற்படும் நிறுவனங்கள் மற்றும் ஆள்களுக்கு எதிராக அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும்" - என்றும் எச்சரித்துள்ளது. (உ-3-7)

## எதிர்க்கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரஸ் ஆகியவற்றைச் சேர்ந்த 113 எம்.பிக்கள் கலந்துகொண்டனர்.

ஐ.தே.கட்சி எம்.பியான கே.என். சொக்ஸி, ஜே.வி.பியைச் சேர்ந்த எம்.பியான விஜிதஹேரத் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றவில்லை. எனினும் தாங்கள் பங்குபற்ற முடியாமைக்கான காரணத்தைத் தெரிவித்து, மேற்படி கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்குத் தமது முழு ஆதரவை வழங்குவதாகக் குறிப்பிட்டு இருவரும் தனித்தனிக் கடிதங்களை அனுப்பி வைத்திருந்தனர்.

இருநூற்று இருபத்தைந்து உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் சபாநாயகரை விடுத்து, 115 உறுப்பினர்களின் ஆதரவை ஒன்றாகக் கூட்டி வெளிப்படுத்தியதன் மூலம் எதிர்க்கட்சிகள் தங்கள் பெரும்பான்மையை நிரூபித்திருப்பதாக அவதானிகள் கூறுகின்றனர்.

எதிர்க்கட்சிகளின் பெரும்பான்மையை நிரூபிக்கும் பிரகடனத்தில் 115 எம்.பிக்களின் கையொப்பங்களும் இடப்பட்டிருந்தன.

நேற்றைய கூட்டத்தில் அந்தப் பிரகடனத்தின் சிங்களமொழி பெயர்ப்பை ஐ.தே.கட்சிப் பேச்சாளர் கருணசேன கொடித்துவக்கும், தமிழ் மொழி பெயர்ப்பை தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசெப் பரராஜசிங்கமும், ஆங்கில மொழி பெயர்ப்பை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் வாசித்தனர்.

அதைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் உரையாற்றினர்.

"நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இன்று நிரூபித்துள்ளோம். எனவே தார்மீகப் பொறுப்பை ஏற்று அரசு பதவி விலகவேண்டும்" என்று அந்தத் தலைவர்கள் அங்கு கோரினர்.

அதையடுத்து ஆறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இவற்றை ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க பிரேரிக்க தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வழிமொழிந்தார்.

அடுத்த மாதம் 7 ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வில் பின்வரும் விடயங்கள் குறித்து விவாதங்கள் இடம்பெறவேண்டும் என அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1) நாடாளுமன்றத் தத்துவங்களை மீள எடுத்துரைக்கும் ஒரு பிரேரணை.

2) அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தின் பிரகாரம் உத்தேச ஐந்து சுதந்திர ஆணைக்குழுக்களை அமைப்பதற்கான தனிச்சட்டமூலம்.

3) அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை.

4) பிரதம நீதியரசர் மீதான குற்றப் பிரேரணை குறித்து விவாதிப்பதற்கான தெரிவுக்குழு நியமித்தல்.

அத்துடன் கீழ்க் காணும் தீர்மானங்களும் அங்கு எடுக்கப்பட்டன.

★ சர்வஜன வாக்கெடுப்பை உடன் ரத்துச் செய்ய வேண்டும்.

★ கடந்த மாதம் 19 ஆம் திகதி நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது, அவற்றுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு உரிமை வழங்கிய சட்டங்கள் வாபஸ் பெறப்படவேண்டும்.

★ சபாநாயகரைச் சந்தித்து இங்கு எடுத்த தீர்மானங்களை உரிய நடவடிக்கைக்காகச் சமர்ப்பித்தல். (உ-3)


## தவறிவிட்டது

மீசாலையைச் சேர்ந்த மார்க்கண்டு குபேந்திரன் என்பவருடைய 091035849 நம்பருடைய விசேட அடையாள அட்டை, கச்சேரி நல்லூருக்கும் புத்தூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும்.

சன்மானம் வழங்கப்படும்.

★ரவி வீடியோ சென்ரர், 73, கச்சேரி நல்லூர் றோட்.
★பரந்தாமன் சுவையகம் குஞ்சர்கடை, நெல்லியடி.
★அ.அன்பழகன், குபேரன் வீடியோ, கரணவாய் தெற்கு, அண்ணாசிலையடி.

(C-17919)

## மீண்டும் குதூகல ஆரம்பம்

### ஜெயபிரதா நகை மாடம்

மீண்டும் எமது ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

22 கரட் தங்க நகைகளை ஓடர் செய்து பெற்றிடலாம்.

175A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். ஜெயபிரதா ஸ்தாபனத்தினர். (91306)

## TRRO COMPUTER TRAINING CENTER

உங்கள் மன நிறைவான சேவை மிகக்குறைந்த கட்டணத்தில்

◆ **Diploma Course: Ms Office**
❖ Certificate Courses
- Ms Word 2000/XP
- Ms Excel 2000/XP
- Ms Access 2000/XP
- Ms Power Point 2000/XP
- Corel Draw
- Page Maker
- Visual Basic
- C++
- Html
- Web page designs

❖ Internet E-mail Classes
❖ Children Programme (சிறுவர்களுக்கான கணனிப்பயிற்சி)
❖ தனிப்பட்ட வகுப்புகள் உங்களுக்கு வசதியான நேரத்தில் ஒழுங்கு செய்யலாம்.

உங்கள் தேவைகளுக்கு:
❖ CD Writing
❖ Computer Printing
❖ Roneo Printing ஆகியவற்றுக்கு எம்மை நாடுங்கள்

விண்ணப்ப முடிவு திகதி: 31-08-2001

விபரங்களுக்கு:-
TRRO Computer Training Center, 4th Cross Street, Jaffna.
கிளை:
TRRO Computer Training Center, K.K.S.Rd, Maruthanarmadam Junction, Opp. Ramanathan College.

## அரியாலையில்

O/L PAPER CLASS

21.08.2001 - TUE - 1p.m

புதிய பாடத்திட்டத்திற்கமைவாக புதிய கோணத்தில் வரும் கடினமான வினாக்களை இலகுவான வழியில் அணுகும் முறையை காட்டித் தரக்கூடிய வல்லமை வாய்ந்த வடக்கின் ஒரேயொரு அதி முன்னணி ஆசிரியர்

விஞ்ஞானம் GRAPHS குமரன்

யாழ் நகரில் இக்கு மட்டுமே வினா - விடை வகுப்பு

ரேடியன்ற்

கச்சேரி நல்லூர் வீதி. (91271)

## மாபெரும் சலுகையுடன் Pentium 4

intel நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்று தரப்படுத்தப்பட்ட எமது நிறுவனம் பெருமையுடன் வழங்கும் intel நிறுவனத்தின் அதி நவீன வெளியீடு

Pentium 4 - 1.4GHZ (1400 MHz)

RS. 92,000/-

**intel pentium 4**
- intel Pentium 4-1.4GHz Processor (1433MHz)
- Intel Net burst Micro Architecture
- Intel Desktop boardD850GB
- 400 MHz system data bus
- 128 MB PC 600 RD RAM
- 40 GB Hard disk
- 8 MB AGP VGA Card
- 1.44 FDS
- 14" Color Monitor
- ATX Tower
- PS/2 Key Board & Mouse with Pad

**Multimedia**
- 52xCD - ROM
- 32BIT PCI SOUND CARD
- Speakers
- 56.6 Kbps Internal Fax Moderm

முற்பணமாக 5000/- செலுத்தி உங்கள் தேர்வான நிர்ணயப்படுத்திக் கொள்ளுங்கள்

intel நிறுவனத்தின் Pentium III 1000 MHz, Pentium III 933 MHz, Pentium III 860 MHz, Pentium III 733 MHz Computers பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பில் பணத்தைச் செலுத்தி யாழ் நகரில் Computer ஐ பெற்றுக்கொள்ளலாம்.

MICRO PC SYSTEMS

No.9, Modern Market, Hospital Road, Jaffna. Telephone: 021 - 2067

Head Office :- No.15, 36th lane, Wellawata, Colombo-06 Telephone - 074-513235, 074-516764

Branch :- No.82, New Chetty Street, Kotahena, Colombo-13 Telephone - 074-619673,

(C/17913) Web: WWWmipaq.com


## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி திருஞானச்செல்வம்

ஈஸ்வரஜோதி, ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி திருஞானச்செல்வம் நேற்று (17.08.2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா திருஞானச்செல்வம் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - நாகமுத்து தம்பதிகளின் அன்புப் புதல்வியும் திருமதி நளினி பத்மநாதன், தி.ஆனந்தநடேசன் (உரிமையாளர், கோறல் ரேஸ்ரி) அவர்களின் அன்புத்தாயாரும், Dr.பேரம்பலம் பத்மநாதன் (செல்வமணி), திருமதி விஜயகலா ஆனந்தநடேசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், குமரகுருபரன், கோகுலரமணன், செல்வபாரதி, பவதாரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற திருமதி சிவஞானசுந்தரம் செல்லம்மா, வடிவேல் (ஓய்வூதியர், புகையிரதப் பகுதி), Dr.பத்மநாதன் (Retd. Pathologist, யாழ்.வைத்தியசாலை), திருமதி மீனாம்பிகை கனகசபாபதி, திருமதி மகாதேவி குணசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (18.08.2001) சனிக்கிழமை பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, ஏழாலை உசத்தியோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈஸ்வரஜோதி, ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

தகவல்: திரு.தி.ஆனந்தநடேசன் (மகன்), Dr.பே.பத்மநாதன் (மருமகன்)

(91313)

... உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.08.2001இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.